
0155

உ
ஓம் சிவ சிவ

திருக்கோணமலை

# கோணேசர் கோவில்

# வரலாறு



4046

.0365

ஆக்கியோன் :
திருமுறைச் செல்வர்
சைவப்புலவர் - பண்டிதர்
இ. வடிவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ந. வித்தியாதரன். அவர்கட்கு அன்பளிப்பு பண்டிதர் இ. வடிவேல்


உ

ஓம் சிவ சிவ

திருக்கோணமலை

# கோணேசர் கோவில்

# வரலாறு




ஆக்கியோன் :

திருமுறைச் செல்வன்

சைவப்புலவர் - பண்டிதர்

இரா. வடிவேல்

★

''பாக்கியபதி''

15, வித்தியாலயம் ஒழுங்கை,

திருக்கோணமலை.


9-12-1984


*Published by :*

**Hindu Dharma Publications,**

Trincomalee.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட

# உள்ளேடுகள்

★

1 முகவுரை

2 ஆசியுரைகள்

3 திருக்கோணேஸ்வர ஆலய வரலாறுகள்

4 தற்போதுள்ள ஆலய மூர்த்திகளின் அட்டவணை

5 மூர்த்திகள் அமர்ந்துள்ள ஸ்தானங்களின் மாதிரிப்படம்

6 மூர்த்திகளின் விளக்கம்

7 பாவநாச தீர்த்தம்

8 ஸ்தலத் தேவாரம் - திருப்புகழ் (திருக்கோணேஸ்வரப் பதிகம்)

9 திருமுறைச்செல்வம்

10 நிறைவுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம்
சிவ சிவ

# முகவுரை

வரலாறு என்பது முடிவில்லாமற் தொடர்ந்து செல்லும் சம்பவங்களின் கோவைத் தொகுப்பு. தேவாரப் பாடல்பெற்ற திருக் கோணேல்வரத்தின் வரலாறுகள் வரலாற்றுசிரியர்களின் கண்ணோட் டத்திற்கேற்ப எழுதப்பட்டு வருகின்றன. இவைகளைப் படித்தபோது கோணேஸ்வரத்தின் ஆதி வரலாறுகளையும், தற்போதுள்ள கோணேசர் கோயிலின் அமைப்பையும், இங்கு பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கும் மூர்த்திகளின் விளக்கங்களையும் சுருக்கமாக எழுதும் எண்ணம் உதயமானது.

காலமாற்றம், சமுதாயமாற்றம், நாகரீகமாற்றம், சமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள் மறைந்துவருவதால் நிகழும் ஏமாற்றம் என்பவைகள் கோணேசர் கோவிலில் ஏற்படுத்தும் தாக்கங்களை ஒப்புநோக்க இந்நூல் உதவும். இச்சிறு நூலானது வழிகாட்டிக ளுக்குக் கைநூலாகவும், வழிபடுபவர்களுக்கு நம்பிக்கையையும் பக் தியையும் வளர்க்கும் மெய்நூலாகவும், வரலாற்றுசிரியர்களுக்குத் தொகுப்பு நூலாகவும் பிறநாட்டவர்களுக்கும் அறிவு நூலாகவும், பிறநாட்டவர்களுக்கும் பிறமதத்தவர்களுக்கும் அறிவு நூலாகவும் அமையட்டும் என்ற எண்ணத்தினுல் எழுதப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தைப் பிறநாட்டவர்களும். பிற மதத்தவர்களும் பெருமளவில் தரிசிக்க வருகிறுர்கள். அவர்களுக்கு வழிகாட்டிக ளாக வருபவர்கள் தத்தமக்குத் தெரிந்ததைக் கூறிச் செல்கின்றுர் கள். சமய ஞானமும், மூர்த்திகளின் விளக்கமும் ஆலய வரலாறு களும் தெளிவாகத் தெரியாத வழிகாட்டிகளின் பிழையான விளக் கங்களைத் தவிர்க்க இந்நூல் உதவும். வழிபாட்டுக்கு வரும் இந்துக் களுக்கு மூர்த்தி நிர்ணயமும் தெளிவும், நம்பிக்கையும், பக்தியும் வளர இந்நூல் உதவும், வரலாற்றுசிரியர்களுக்கு கோணேஸ்வரத் தின் ஆதி வரலாற்றையும், இன்று அமைந்துள்ள கோவிலின் வரலாற்றையும், புரிந்துகொள்ள இந்நூலுதவும். பல நூற்றுண்டு களாகக் கோணேசர் கோவில் வரலாறுகளில் ஏற்பட்டுவந்த மாற் றங்களை அறிந்துகொள்ள இந்நூலுதவும் என்ற நோக்கத்தோடு இச்சிறு நூலை உங்கள்முன் அறிமுகப்படுத்திக் கோணேசப்பெருமா னுடைய திருவடிகளில் சமர்ப்பணம் செய்கின்றேன். குற்றங்களைந்து குணங்கொள்ளுமாறு பணிவன்புடன் அனைவரையும் வேண்டு கின்றேன்.

'' பாக்கியபதி ''
15, வித்தியாலயம் ஒழுங்கை,
திருக்கோணமலை. 9.12.84

திருமுறைச்செல்வர்
சைவப்புலவர் - பண்டிதர்
**இ. வடிவேல் அவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆசியுரை

எல்லாம் வல்ல ஸ்ரீ ஹம்சகமன மாதுமையம்பாள் சமேத
ஸ்ரீ கோணேசப் பெருமான் திருவருள் முன்னிற்க.

"சிவேந ஸ்தாபிதம் சைவம்
சைவேந ஸ்தாபிதம் சிவம்"

சிவம் சைவத்தையும், சைமம் சிவத்தையும் தோற்றுவித்தது
— ஆகமக்கருத்து

சைவத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் உறைவிடம் திருக் கைலாயமலை. எமது நாட்டில் தெக்ஷிணகைலாயமாகிய திருக்கோணேஸ்வர க்ஷேத்திரத்தில் வியாபித்திருந்து சகல ஜீவ ராசிகளுக்கும் ஆன்மகோடிகளுக்கும் அருள்பாலித்த வண்ணம் இருகிருர்.

சகல சிறப்புக்களும் நிறைந்த இத்திருத்தலத்தைப் பற்றிய வரலாறுசளையும் கோவில் அமைப்பு முறைகளையும், பரிவார மூர்த்தி களின் விளக்கங்களையும் இந்நூலாசிரியர், பண்டிதர் — சைவப்புலவர், — திருமுறைச்செல்வர் திரு இ வடிவேல் அவர்கள் திருமுறைகள், சைவசமய பாண்டித்தியம், சொற்பொழிவுத் திறமைகள் இவைகளைப் பயன்படுத்தி எம்பெருமானின் அருளாட்சியுடன் எமக்குத் தந்துள்ளார்

சைவப் பணிக்கே தன்னை அர்ப்பணித்துள்ள திரு. இ வடிவேல் அவர்கள் கோணேசப் பெருமானின் திருவருளைப் பெற்று ஷேமமுடன் வாழ எம்பெருமானை இறைஞ்சி ஆசிகூறுகின்றேம்.

திருக்கோணமலை
19 - 7 - 84

சீதாராம - சுப்பிரமணியக் குருக்கள்
பிரதம குரு
ஸ்ரீ கோணேஸ்வர தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆசியுரை

சர்வலோக நாயகனுகிய இறைவன் எழுந்தருளியிருந்து சர் வான்மாக்களுக்கும் அருள்பாலிக்கும் இடங்கள் ஆலயங்கள் எனப் படும். இந்து மதத்தின் தெய்வீகம் ஆலயங்களை அடிநிலையாகக் கொண்டு வியாபித்திருக்கின்றது. அத்தகைய ஆலயங்களுள் மூர்த்தி, தலம், தீர்த்த விசேடங்கள் நிறைந்த இடம் க்ஷேத்திரம் எனப்படும்.

ஸ்ரீ மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமான் அமர்ந்து அருள்புரியும் இந்த ஸ்தலமானது சிவக்ஷேத்திரங்களுள் தலைசிறந்து விளங்குகின்றது. தெய்வீகப் பொலிவும் திருவருட் சிறப்பும் நிறைந்த இந்தத் திருப்பதியைத் திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடிச் சிறப்பித்துள்ளார்.

''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை'' என்று சம்பந்தர் துதித்த இந்த க்ஷேத்திர வரலாறுகளையும், போர்த்துக்கிசரால் ஆலயம் அழிக்கப்பட்டு முன்னூற்றறுபது வருடங் களின் பின் புனராவர்த்தனம் செய்யப்பெற்ற புதிய ஆலயத்தின் சிறப்புக்களையும், மூர்த்திகளின் தத்துவ விளக்கங்களையும், யாவரும் அறியும் வண்ணம் அழகாக எடுத்து விளக்கியுள்ளார் சைவப் புலவர் - பண்டிதர் இ. வடிவேல் அவர்கள். சிவநெறியாளர்களும், பிறநாட் டவர்களும், பிற மதத்தவர்களும், கோணேஸ்வரத்தின் ஒப்பில்லாப் பெருமைகளை உணரத்தக்க வகையில் இந்நூலில் இரத்தினச்சுருக்க மாக விளக்கியுள்ளார்.

ஆத்மீக வாழ்க்கைக்கே தன்னை அர்ப்பணித்துச் சமயப் பணி யும், சமூகப் பணியும் செய்துகொண்டிருக்கும் பண்டிதருடைய அரும் பெரும் முயற்சிகளால் இந்நூல் தோன்றியுள்ளது. தோன்றாத் துணையாயிருந்து அனைவரையும் இரட்சித்தருளும் கோணேசப் பெரு மானுடைய பெருங் கருணையினுல் நூலாசிரியரும் வாழ்க. நூலும் வாழ்க. இந்நூலைப் படிப்போரும் வாழ்க.

*சிவாச்சாரிய சிரோரத்தினம்*
**பூரண - சண்முகரத்தினக் குருக்கள்**
விஸ்வநாத சுவாமி (சிவன்) தேவஸ்தானம்

'' சுமதிபவனம் ''
திருகோணமலை,
17-7-84

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# திருக்கோணேஸ்வர வரலாறு

★

ஈழநாட்டில் பண்டைக்காந்தொடக்கம் பல சிவஸ்தலங்களிருந்து வருகின்றன. அவற்றுள் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் இரண்டும் ஈழநாட்டின் இருகண்கள் போல உலக இந்துள்களின் கவனத்திலிருந்து வருகின்றன. திருக்கோணேஸ்வரம் தெட்சண கயிலாயம் என்று போற்றப்பட்டு வருகின்றது. தெட்சணகயிலாய புராணத்தில் கூறப்படுகின்ற வரலாறுகளிலிருந்து இதன் உண்மை புலப்படுகின்றது.

கோணேசர்கோவில் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுச் சிறப்புக்களையுடைய சிவஸ்தலம். இலங்கையில் வாழ்ந்துவரும் ஆதிச்சைவக் குடிமக்களின் பாரம்பரியமான வழிபாட்டுத்தலம். பலநூற்றுண்டுகளுக்கு முன்னிருந்தே உலகின் பலபாகங்களிலும் வாழ்ந்துவரும் இந்துக்களின் வழிபாட்டுக்குரிய புனிதத் தலமாகத் திருக்கோணேஸ்வரம் இருந்துவருகின்றது திருக்கோணேஸ்வரத்திலுள்ள இறைவன் பெயர் – கோணேஸ்வரர். இறைவி பெயர் - மாதுமையம்பாள். தீர்த்தம் – பாபநாசதீர்தம். தலவிருட்சம் – கல்லால் - மூர்தி, தலம், தீர்த்த விசேடங்களைக் கொண்டது கோணேஸ்வரம்.

கிறிஸ்துவுக்கு முன் ஆருயிரம் ஆண்டளவில் இலங்கையை இராவணன் ஆண்ட வரலாறு இராமாயண காவியத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இராவணன் வழிபட்டதலம் திருக்கோணேஸ்வரம் என்ற வரலாறு புராண, இதிகாசங்களிலும், தேவாரங்களிலும் பேசப்படுகின்றன. இராவணன் தனது தாயாரின் வழிப்பாட்டிற்காக லிங்கத்தை பெறுவதற்கு இங்கு தவம் செய்தானென்றும் தெட்சண கைலாய பதியாகிய கோணேசப் பெருமான் அவனுடைய தவத்திற்கிரங்கிக் காட்சிகொடுக்காததால் அகங்காரங்கொண்ட இராவணன் தென்கயிலையை வெட்டிப் பிளந்தானென்ற வரலாற்றுக்கு எடுத்துக்காட்டாக கோணேசர் கோவிலுக்குப் பக்கத்திலேயே ''இராவணன் வெட்டு'' என்ற மலைப்பிளவு காணப்படுகின்றது. ''இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்'' என்ற தேவாரப் பாடல் இதனை உறுதிப்படுகின்றது. ''எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்'' என்று ஞானசம்தந்தர் அருளிச்செய்த ஸ்தலத் தேவாரமும் இந்த வரலாற்றை உறுதிப்படுத்துகின்றது. இராவணன் தனது தாயருக்கு அந்தியக் கிரியைகள் செய்வதற்காக உண்டாக்கிய வரலாற்றுச்சிறப்புமிக்க கன்னியாய் வெந்நீரூற்றுக்கள் ஏழும் திருக்கோணேஸ்வரத்திலிருந்து ஏழு கில்லோமீற்றர் தூரத்தில் இருப்பதைக் காணலாம். இந்த வெந்நீரூற்றுக்களை இந்துக்கள் புனிததீர்தமாகக் கருதி அந்தியக் கிரியைகள் செய்வதற்குப் பாரம் பரியமாகப் பயன்படுத்திவருகின்றார்கள்.

சிறப்புவாய்ந்த இந்தச் சிவஸ்தலத்திலிருந்த கோணேசர் கோவிலை கி. பி. 1624 ஆம் ஆண்டு போத்துக்கீசர் இடித்தழித்து அந்தக் கற்கோவிலிலிருந்த கற்களால் ''பிறடறிக் கோட்டையைக்'' கட்டியிருக்கின்றார்கள். கோட்டைவாசலில் இரட்டை மீனிலச்சனையுடன் ''முன்னேகுளக்கோட்டன் மூட்டுந்திருப்பணியை'' என்று தொடங்கும் பாடல் பொறிக்கப்பட்ட கற்தூண்கள் இன்றும் காணப்படுகின்றன. கோவிற் தூண்கள் பல கோட்டையின் உட்புறத்தில் வைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன; சிற்ப, சித்திரங்கள் பொறிக்கப்பட்ட கோவில்வாயிற் படிக்கற்கள் முதலியனவற்றைப் பயன்படுத்திக் கோணேசர்கோவிலின் மேற்குப் பக்கத்தில் படகுகளை அணைக்கப் பயன்படுத்தும் மேடையைப் போத்துக்கீசர் கட்டியிருந்தார்கள். கோட்டைச் சுவரைப்பிரித்து ஆராய்ந்தால் கோணேசர்கோவில் வரலாற்றுச் செல்வங்கள் கிடைக்கும். கோணேசர்கோவிலை இடித்தழித்த போத்துக்கீசத் தளபதியாகிய கொன்ஸ்ரன்டைன்டிசா என்பவன் போத்துக்கல் அரசனுக்கனுப்பிய அறிக்கையொன்று லிஸ்பன் நகரத்திலுள்ள ''அஜுடா'' நூல் நிலையத்திலிருக்கின்றது. அந்த அறிக்கையில் (51ஆம் பக்கம் VIII - 40) மனுராசா அல்லது மாணிக்கராசா என்னும் மன்னன் இலங்கையை ஆண்டானென்றும் அவன் கி-மு 1300 ஆம் ஆண்டு கோணேசர் கோவிலைக் கட்டினனென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இலங்கையை அரசாண்ட போத்துக்கீசத் தளபதிகளின் பதிவேடுகளில் திருக்கோணேஸ்வரத்தை அழித்த கொன்ஸ்ரைன்டைன்டிசா வரைந்த படங்களும், கோவிலின் நீள அகல எல்லைகளும், குறிப்புகளும் காணப்படுகின்றன. அவனால் அழிக்கப்பட்ட ஆலயத்தின் பரப்புத் தரப்பட்டிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. கோவில் அமைந்த நிலத்தின் நீளம் 600 பாகம், அகலம் 80 பாகம், என்றும் அது ஒடுங்கி ஒடுங்கிச்சென்று 30 பாகமாக அமைந்திருந்த தென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கூற்றின்படி தற்போது ஆலயம் அமைந்திருக்கும் கோட்டைப்பகுதி முழுவதும் ஆலயப் புனிதப்பிரதேசமாயிருந்ததென்பதை அறியலாம் எனவே இற்றைக்கு நாலு நூற்றூண்டுக்கு முன் இப்பொழுது பிறடறிக்கோட்டை அமைந்திருக்கும் நிலபரப்பு முழுவதும் கோணேசர் கோவிலுக்குரியதாயிருந்ததென்பதைப் போத்துக்கீசரின் பதிவேடுகள் உறுதிப்படுகின்றன.

கலாநிதி போல் ஈ. பீரிஸ் என்பவர் எழுதிய இலங்கை என்னும் நூலின் இரண்டாம் தொகுதி 168ஆம் பக்கத்தில் கூறப்படுவதாவது. கி. பி. 1624 - ஆம் ஆண்டில் கோடை காலத்தில் (சித்திரைமாதம்) ''டிசா'' என்பவன் கோணேசர்கோவிலை அழிக்கும் காரியத்தில் ஈடுபட்டான். கோணேசர்மலை பட்டணத்தோடு தொடர்புபட்டுக் கடலுக்குள் நீண்டு கிடக்கின்றது. அப்பகுதியில் மூன்று கோவில்கள் இருந்தன. ஒன்று மலையடிவாரத்திலும், அடுத்தது மலையின் நடுப்பகுதியிலுமிருந்தது, கடல்மட்டத்திலிருந்து 400 அடி உயரமான மலையுச்சியில்தான் மிகப்பிரபல்லியமான மூன்ருவதுகோவில் இருந்தது இங்கிருந்த கோவிலை அழித்து முக்கோணவடிவமான கோட்டையைக் கட்டினுர்கள்.

போத்துகீசச் சரித்திர நூலாசிரியராகிய டீ, குவைரேஸ் பாதிரியார் எழுதிய நூலின் இரண்டாம் பாகம் 236ஆம் பக்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது. ''கிழக்கின் ரோமாபுரியாக இவ்வாலயம் விளங்குகின்றது. பூரிஜெகந்நாத் ஆலயத்திற்கும் இராமேஸ்வரத்திற்கும் போய்த் தெரிசனம் செய்துவரும் யாத்திரிகர்களிலும்பார்க்க மிக அதிகமான யாத்திரிகர்கள் இவ்வாலயத்தைத் தரிசித்து வருகின்ருர்கள். திருகோணமலைத் துறைமுகத்தின் தரைப்பகுதியிலிருந்து கடலுக்குள் நீண்டிருக்கும் மலையின்மேல் இலங்கை மன்னர்கள் மூன்று ஆலயங்களைக் கட்டியிருந்தார்கள். அவற்றில் இரண்டு கோவில்கள் மலையின் இரண்டு அந்தங்களிலும் மற்றது இடைநடுவிலும் கட்டப்பட்டிருந்தது. கடலினுள் நீண்டிருக்கும் மலைப்பகுதியின் மிக உயரத்திலிருந்த ஆலயமே இந்தியநாட்டு இந்துக்களாலும் மிகமுக்கியத்துவங் கொடுத்துப் போற்றி வணங்கப்பட்டுவந்த ஆலயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 436 ஆம் ஆண்டு மனுநீதிகண்ட சோழமன்னனின் பரம்பரையில் வந்த வரராமதேவனின் மகனாகிய குளக்கோட்டுமன்னன் சோழநாட்டிலிருந்து திருக்கோணமலைக்கு வந்து கோணேசர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தானென்று யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. குளக்கோட்டுமன்னன் செய்த மாபெருந் திருப்பணிகளாகிய குளமும், கோட்டமும் (கோவில்) எடுத்த சிறப்பினால் அவனுடைய இயற்பெயர் மறைந்து "குளக்கோட்டன்" என்ற சிறப்புப்பெயரே நிலைத்து விட்டது. குளக்கோட்டுமன்னன் புனருத்தாரணத் திருப்பணிகள் செய்ததைக் கூறும் கோணேசர் கல்வெட்டிலுள்ள அறுபது பாடல்களில் ஒன்று இது.

திருந்து கலிபிறந் தைஞ்ஞூற்றிருபதுடன் இரண்டாண்டு
சென்றபின்னர்
புரிந்திடப மாதமதி லீரைந்தாந்தேதி திங்கள் புணர்ந்த நாளில்
தெரிந்தபுக ழாலயமுஞ் சினகரமுங் கோபுரமுந் தேரூர் வீதி
பரிந்து ரத்ன மணிம்திலும் பாபநாசச் சுனையும பகுத்தான் மேலோன்

மேலே கூறப்பட்ட பாடலைத்தவிர, கோட்டைவாயிற் கற்துணில் பொறிக்கப்பட்டிருக்கும் பின்வரும் பாடல் குளக்கோட்டு மன்னனுடைய திருப்பணியையும் அதன் அழிவையும் கூறுகின்றது.

முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே - மன்னாகேள்
பூனைக்கண் செங்கண் புகைக் கண்ணனாண்ட பின்
மானே வடுகாய் விடும்.

குளக்கோட்டுமன்னன் கோணேசர் கோவிலில் புனருத்தாரணத் திருப்பணிகள் செய்து, கோவிலைப் பரிபாலனம் செய்வதற்காக மருங்கூரிலிருந்தும், காரைக்காலிலிருந்தும் குடிமக்களைக் கொண்டுவந்து குடியமர்த்தினான். கோவிலைத் தாபரிப்பதற்கு நிரந்தர வருவாயை ஏற்படுத்துவதற்காக 2700 அவணம் நெல்விதைப்புத் தறையை உண்டாக்கினான். இந்த விளைநிலத்தை நீர்ப்பாய்சுவதற்காக அல்லைக்குளம், வெண்டரசன்குளம், கந்தளாய்க்குளங்களைக் கட்டுவித்தான் இம்மாபெருந் திட்டத்தைத் தர்மநெறிதவறாமல் பரிபாலிப்பதற்காக கனகசுந்தரப் பெருமாள், தனியுண்ணாப் பூபால வன்னிமைகளாகிய முகாமைகளை நியமித்தான் கோவிற் பூசைகளைச் சிறப்பாக நடத்துவதற்கு வேதநாயக முதன்மை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவநாயகமுதன்மை என்ற குருமாரை நியமித்தான். கோவிற் தொழும்பாளர்களை நியமித்து அவரவர்களுக்குரிய கடைமைகளையும் கொடுத்து மானியங்களும் வழங்கினன். இந்த விபரங்கள்யாவும் கோணேசர்கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றது.

ஏழாம் நூற்றுண்டில் திருஞானசம்பந்தமூர்தி நாயனர் திருக்கோணேஸ்வரத்திற்குத் தேவாரத் திருப்பதிகம் பாடியருளினர்.

**நிரைகழலரவம் சிலம்பொலியலம்பும் நிமலர் நீறணி திருமேனி**
**வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர்**
**கொடியணிவிடையர்**
**கரைகெழு சந்துங் காரகிற் பிளவும் அளப்பருங்கனமணி வரன்றிக்**
**குரைகடலோதம் நித்திலங் கொளிக்குங் கோணமாமலை யமர்ந்தாரே**

என்ற தேவாரத்தை முதலாகவுடைய பத்துப் பாடல்கள் அவரால் பாடப்பட்டிருக்கின்றன.

திருநெய்த்தானம் என்ற திருத்தலத்தைத் திருநாவுக்கரசர் பாடும்போது "தக்காரடியார்க்கு" என்ற திருத்தாண்டகத்தில் "தெக்காரும் மாகோணத்தானே" என்று திருக்கோணேஸ்வரத்தை நினைந்து பாடியருளினர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய "நிறைக்காட்டானே நெஞ்சத்தானே" என்ற ஊர்த்தொகைத் திருப்பதிகத்தில் "மறைக்காட்டானே திருமாந்துறையாய் மாகோணத்தானே" என்று திருக்கோணேஸ்வரத்தை நினைத்து பாடியுள்ளார். பட்டணத்துப்பிள்ளையார் பாடியருளிய திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் "முக்கோணம் தொடர்கடுக்கை மலையன்வாழ் திருவாலங்காடு ஏகம்பம் வாழ்த்துமினே" என்று திருக்கோணேஸ்வரத்தை முக்கோணம் என்று வைத்துப் பாடியுள்ளார். மூன்று கோணமாயமைந்த மலைகளையுடைய காரணத்தால் இத்தலம் திரிகோணமலையெனவும் வழங்கி வருகின்றது. திரிகோணமலை அந்தாதி என்ற நூலை திரு சி. ஆறுமுகப்புலவர் இத்தலத்திற்குப் பாடியுள்ளார். தெட்சண கயிலாய புராணம், திருக்கோணசல புராணம், தெட்சணகயிலாய மான்மியம், திருக்கோணசல வைபவம், கோணேசர் கல்வெட்டு என்பன இத்தலத்திற்குரிய பழைய நூல்கள். பிற்காலத்தில் இத்தலத்தைப்பற்றிய ஆய்வுநூல்களும் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றுள் கலாநிதி செ. குணசிங்கம் அவர்கள் எழுதிய "கோணேஸ்வரம்" புலவர் வை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமாஸ்கந்தர் எழுதிய திருக்கோணேஸ்வரம் என்பன குறிப்பிடத்தக்கன, பெரியபுராணம் பாடியருளிய சேக்கிழார் சுவாமிகள்.

" ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில் . என்ற பாடலில்
மன்னுதிருக்கோணமலை மகிழ்ந்த செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வனங்கிப் பாடி "

என்று திருக்கோணேஸ்வரத் தலத்தைப் பாடி நினைவுறுத்துகின்றார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரி நாதசுவாமிகள் "விலைக்குமேனியில் அணிக்கோவை மேகலை" என்று தொடங்குந் திருப்புகழிலே.

" நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொணமலைத் தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் - வருவோனே "

என்று திருக்கோணேஸ்வரத்தை நினைந்துருகிப் பாடியுள்ளார். குருநமச்சிவாய தேசிகர் அருளிய நமச்சிவாய மாலையில் "கோணமாமலையில் வாழும் கோதிலா ஆதியேநீ ஆணிலைப் பெண்ணுமில்லை அத்தனே நமச்சிவாய" என்று கோணேஸ்ரத்தைப் பாடியுள்ளார்.

சேர் எமேசன் ரெனற் என்பவர் எழுதிய இலங்கைச் சரித்திரம் இரண்டாம் பாகம் 484 - 485 ஆம் பக்கங்களில் பின்வரும் விபரங்கள் காணப்படுகின்றன. "கி. பி. 1639 ஆம் ஆண்டில் டச்சுக்காரர்கள் திருக்கோணமலையைக் கைப்பற்றிக் கோணேசர் கோவிலில் மிகுதியாகவுள்ள கற்களையும் தூண்களையும் இடித்து ஆலயத்தின் ஏனைய பொருட்களையுமெடுத்துக் கோட்டைகட்டப் பயன்படுத்தினர்கள். இங்குள்ள சில இடங்களுக்கு டச்சுப் பெயர்களையும் சூட்டினர்கள் இவ்வாறு இவர்கள் கொள்ளையடித்து ஆலயத்தைச் சிதைத்துப் பொருட்களைச் சூறையாடியபோதிலும் இந்துக்கள் இவர்களுக்கு ஒளித்து மறைந்து இந்த இடத்தில் தங்கள் வணக்கத்தைச் செலுத்தி வழிபட்டு வந்தார்கள்."

போத்துக்கீசர் கோணேசர் கோவிலை இடித்தழித்த காலத்தில் ஆலயத்திலிருந்த குருமாரும் பக்தர்களும் ஆலயவிக்கிரகங்கள் அன்னியருடைய கையிலகப்படாமல் எடுத்துச் சென்று நிலத்தையகழ்ந்து அவற்றினுள்ளும், கிணறு, குளங்களிலும் புதைத்து மறைத்து வைத்திருந்தார்கள். அவற்றில் பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் கோணேசர், மாதுமையம்பாள், போகசக்தி, சந்திர சேகரர், அன்னம் என்பன இறைவனுடைய திருவருட் செயலால் 1950ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்டன. அதன் பின்னர் தற்போதிருக்கும் புதிய ஆலயம் கட்டப்பட்டு இம் மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பெற்று 1963 ஆம் ஆண்டு புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. 25 1 81 இல் மேலும் பலதிருப்பணிகள் செய்யப்பெற்று புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கின்றது. போத்துக்கீசர் இடித்தழித்த ஆலயத்திலிருந்த சில விக்கிரகங்களில் சிதைந்த பகுதிகள் மலையடிவாரத்திற் கடலினுள் கிடக்கின்றன. அவற்றில் ஊனப்பட்ட லிங்கம் ஸ்ரீ நாராயணமூர்த்தி, மகாலெட்சுமி, கோஷ்டத்திலுள்ள சிதைந்த பகுதிகள், சிலாசாசனச் சிதைவுகள் என்பன ஆலயத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஆங்கிலேயராட்சிக்காலத்தில் கி. பி. 1890ஆம் ஆண்டு மத்தியமாகாண அரசாங்கஅதிபராயிருந்த ஹென்றி டபிள்யூ. கேவ் என்பவர் எழுதிய இலங்கை என்னும் சரித்திர நூலில் திருக்கோணேஸ்வரத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார் "திருக்கோணமலையில் கடலுக்குள் நீண்டிருக்குங் குன்று மிகப் பழமைவாய்ந்ததும், மனத்தைக் கவரக் கூடிய வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்டதுமாகும். குறிப்பிட்ட குன்று கடலினுள்ளிருந்து எழுந்து 400 அடி உயரத்தில் அழகுற நிமிர்ந்து நிற்கின்றது. இந்துக்களின் வரலாற்றுச் செல்வங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. புத்தர் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே இந்துக்கள் இதைப் புனித இடமாகப் போற்றிவந்துள்ளார்கள். தங்களைப் பிராமணர் என்று சொல்லிக்கொள்ளும் ஒருசாரார் (ஆரியர்) தென்னிந்தியக் கலைச்சிற்பங்களைக்கொண்டதாக விளங்குகின்ற தூபி, கோபுரம் என்பனவற்றையுடையதாக ஆலயங்களைக் கட்டியிருந்தார்கள். இவ்வாலயம் ஆயிரங்கால் மண்டபத்தையுங் கொண்டிருந்தது. போத்துக்கீசர் இக்கோவிலை இடித்தழித்தபின் இப்பொழுது அந்த இடம் வெற்றிடமாகக் காட்சியளிக்கின்றது. போத்துக்கீசரின் அக்கிரமத்திற்கு எடுத்துக்காட்டாக இப்பொழுது விளங்குகின்றது இதனைப் பார்த்தால் யாரும் வருத்தப்படாமலிருக்க முடியாது. ஒரு சிறு காரணமுமில்லாமல் இவ்வாலயம் அழிக்கப்பட்டுவிட்டது. எனினும் இந்துக்கள் அந்த வெற்றிடத்தைச் சிவவழிபாட்டுத் தலமாக மதித்து வழிபட்டுவருகின்றார்கள். தெய்வ நிந்தனைக்குரியதும், வருத்தத்திற்குரியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான செயலை பதினேழாம் நூற்றூண்டில் போத்துக்கீசர் செய்த போதிலும் இன்னமும் அந்த இடம் புனிதமும் மேன்மைக்குரிய வழிபாட்டுத் தலமாகவுமிருந்து வருகின்றது.

போத்துக்கீசர், ஒல்லாந்தர்களாகிய அன்னியராட்சிக்காலத்தில் தற்போதுள்ள பிறடறிக்கோட்டை அவர்கள் வசமிருந்ததால் இந்துக்களின் மதசுதந்திரமும், வழிபாட்டுச் சுதந்திரமும் மறுக்கப்பட்டுவந்தன. பிரித்தானிய ஆட்சியாளர்கள் திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையையும், தெய்வீகச் சிறப்பையுமுணர்ந்து இந்துக்களுக்கு மதசுந்திரத்தையும் வழிபாட்டுச் சுதந்திரத்தையும் வழங்கியிருந்தார்கள். திருக்கோணேஸ்வரத்தில் அன்னியர்செய்த அனர்த்தங்களுக்கும், அட்டூளியங்களுக்குமுரிய பிரதி பலனை அனுபவித்துவிட்டார்கள். மதவழிபாடு, அரசியற் சூதாட்டங்களுக்கும் பொருட் சூறைகளுக்கும் அப்பாற்பட்டது. யாராயிருந்தாலும், எந்த வழிபாட்டுத் தலமாயிருந்தாலும் புனித ஆலயங்களுக்கு ஊனம் விளைவிப்பவர்கள் இன்னலை அனுபவித்தேதீரவேண்டும். இரண்டாவது உலகமகாயுத்தத்தில் திருக்கோணமலையின்மீது ஜப்பானியர் குண்டுகளை அள்ளி வீசினூர்கள். கோணேசர்மலையில் நிறுவப்பட்டிருந்த விமான எதிர்ப்புப் பீரங்கிகளுக்கு இலக்குவைத்து வீசப்பட்ட குண்டுகளில்ஒன்றேனும் கோணேசர்மலையில் விழவில்லையென்பது தெய்வீக அற்புதமாகும்.

கடலினடியில் ஆராய்ச்சிசெய்த சேர் ஆதர்சிளாக், மைக் வில்சன், ரொட்னி ஜொங்க்லஸ் என்பவர்கள் மிகப் பழமைவாய்ந்த ஆலயம் கடலினடியில் அமிழ்ந்தியிருப்பதாகக் கண்டறிந்தார்கள் பிரம்மாண்டமான மணியும், விளக்குகள், தூண்கள் கோவிற்தளங்கள் என்பன கடலினடியிலிருப்பதாகப் பத்திரிகையில் பிரசுரித்தார்கள். இந்தக்கோவில் கடல்கோளினுலழிந்த கோவிலாயிருக்கலாம். குளக்கோட்டு மன்னன் திருப்பணிசெய்த கோணேசர்கோவில் இருந்த காலத்தில் திருக்கோணமலை மாவட்டத்தில் கங்கைவேலி சிவன்கோவில், திருமங்கலாய் சிவன்கோவில் அகஸ்தியர் ஸ்தாபணம் கந்தளாய் சிவன்கோவில், கட்டளைப் பிள்ளையார் கோவில் என்பனவும் சிறப்புற்று விளங்கின. தற்போது கோணேஸ்வரத்தைச் சூழ்ந்து ஸ்ரீ பத்திரகாளியம்பாள் கோவில், ஆலடிப்பிள்ளையார்கோயில், வில்லூன்றிக் கந்தசாமி கோயில், முத்துக்குமாரசுவாமி கோவில், விஸ்வநாதசுவாமி சிவன்கோவில், வீரகத்திப் பிள்ளையார்கோவில், மாரியம்மன் கோவில், ஸ்ரீ கிருஷ்ணன் கோவில், சமாதிப்பிள்ளையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில், சனீஸ்வரன் கோவில், நடேசர் கோவில் முதலிய பல ஆலயங்கள் நிறைந்து திருக்கோணமலை தெய்வத் திருவருட் சிறப்போடு விளங்குகிறது.

ஆதியந்தமில்லாத இறைவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் இந்துக்களின் புனிததலம் திருக்கோணேஸ்வரம். இலங்கைவாழ் இந்துக்களாலும், சிறப்பாகத் திருக்கோணமலைச் சைவப்பெருமக்களாலும் புனராவர்த்தனத் திருப்பணிகள் செய்து அமைக்கப்பட்ட கோணேசர் கோவிலை இப்போது தரிசிக்கும் பாக்கியம் பெற்றுள்ளோம். கருவறையில் காசியிலிருந்து கொண்டுவரப்பெற்ற சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பெற்றிருக்கின்றது. நிலத்திலிருந்து கிடைத்த மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானும் ஏனைய பரிவார மூர்த்திகளும் ஸ்தாபிக்கப்பட்டு குளக்கோட்டு மன்னனுடைய காலத்தில் நடைபெற்றுவந்த மகோற்சவங்களும், பாபநாசத் தீர்த்தோற்சவமும் தெப்பத் திருவிழாக்களும், சிவராத்திரியையடுத்து தொடர்ந்து மூன்று நாட்கள் நகர்வலமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது இத்தலத்தில் நடைபெற்ற அற்புதங்களை தலபுராணங்கள் வாயிலாகஅறியலாம். திருக்கோணமலை மாவட்டம் கோணேசப் பெருமானுடைய திருவருளாட்சிக்குட்பட்டது அதனால் திருக்கோணமலை மக்களின் வாழ்க்கையில் இந்து சமயப் பண்பாடு, பழக்க வழக்கம், கலை, கலாச்சாரம் என்பன பின்னிப் பிணைந்துகிடப்பதைக் காண்கிறோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோணேசர் ஆலய அமைவின் அட்டவணை

★

1. கருவறை - கோணேசலிங்கம்
2. மாதுமை அம்பாள்
3. நடேசர்
4. நவக்கிரகங்கள்
5. தேவசபை - எழுந்தருளி மூர்த்திகள்
6. வைரவர்
7; சூரியன்
8. நாகதம்பிரான்
9. சந்திரன்
10. கொடி ஸ்தம்பம்
11. பலிபீடம் – நந்தி
12. சேக்கிழார்
13. சமயகுரவர்கள் : சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்
14. திருமுறைகள்
15. நிருத்த கணபதி
16. தெட்சணமூர்த்தி
17. ஸ்ரீ மகா கணபதி
18. லிங்கோற்பவர்
19. பிரம்மா
20. துர்க்காம்பிகை
21. ஸ்ரீ சுப்பிரமணியர்
22. சண்டேஸ்வரர்
23. ஆகாயலிங்கம் - மலைப்பூசை நடைபெறும் இடம்
24. ராஜகோபுரம்
25. அம்பாள் கோபுரம்
26, விமானங்கள்
27. இராவணன்வெட்டு
28. ஆதிலிங்கம் - இலட்சுமி, நாராயணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூர்த்திகளின் விளக்கம்

## 1 கருவறை - கோணேசலிங்கம்

சிவலிங்கத் திருமேனி, வேதாந்த, சித்தாந்த தத்துவங்க ளெல்லாம் விளக்கமுறுவதற்கு இடமாயிருக்கும் திருவுருவம். சிவஸ்தலங்களில் மூலவராக அமர்ந்திருப்பது சிவலிங்கம். கோணேஸ்வரத்தில் கருவறையிற் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப் பது சுயம்புலிங்கம். இதனைத் தலப்பெயர்கொண்டு கோணலிங் கம் என்று வழிபட்டு வருகின்றூர்கள். சிவம் - கடவுள், லிங்கம் அடையாளம். சிவலிங்கம் - கடவுளைக் குறிக்கும் அடையாளம்.

''சி'' - நாதவடிவான சிவம். அது சிவலிங்கத்தின் மேலே யிருக்கும் தண்டுபோல நீண்டிருக்கும் பகுதி. ''வ'' விந்துவடிவ மான சக்தி. அது கீழேயமைந்துள்ள பீடம் அதனை ஆவுடையார் என்பர். அது சக்திமயமானது. ஆவுடையாரின் மேற்புறத்தில் கோமுகைபோல் ஒரு பகுதி நீண்டிருக்கும். லிங்கம் சகல அண்ட சராசரங்களும் தோன்றிநின்று அனைத்தும் ஒடுங்குவதற்கு நிலைக் களமாயிருப்பது. சிவலிங்க அமைப்பில் சுயம்புலிங்கம், கிரியா லிங்கம் என இருவகைகளுண்டு தானேதோன்றியுள்ளது. சுயம்பு லிங்கம். கருவிகளால் செய்யப்பட்டது கிரியாலிங்கம். காரண காரியங்களுக்கேற்பச் சிவலிங்கம் பல பெயர்களைப் பெறுகின்றது. பலராலும் வழிபடப்படுவது பரார்த்தலிங்கம். ஒருவர் ஆத்மார்த் தமாக வைத்து வழிபடுவது ஆத்மலிங்கம்.

கட்புலனுகாத அருவத் திருமேனிக்கும், கட்புலனுகும் உரு வத் திருமேனிக்கும் மூலமான இருப்பிடமாகி, குணம், குறி கடந்த சிவபெருமானை ஓர் அடையாளமாகிய குறியின்கண்வைத்து வழிபடுவதற்குரிய வழிபாட்டு வடிவமாக அமைவது சிவலிங்கம் சிவலிங்கம் அருவுருவத் திருமேனி என்பது இதன் பொருள் அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்றும் இறைவனுடைய திருமேனிகள். அருவம் என்பது உருவமில்லாதது (சிவம், சக்தி, நாதம், விந்து). கை, கால். முகத்துடன் உருவம் கொள்வது உருவத் திருமேனி எனப்படும் (மகேஸ்வரன், உருத்திரன், மால், அயன்) சிவலிங்கம் காண்பதற்கும், தீண்டுவதற்குமுரிய உருவப் பிழம்பாக இருப்பதால் உருவமாகவும், கை. கால், முகம் இல்லா மையால் அருவமாகவும் ஒருசேரத் தோன்றுவதால் அருவுருவ மெனப்படும். சிவலிங்கத்தைச் சதாசிவம் என்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களுள், அருவத்தன்மை தீயின்கண் மிகுத்துக் காணப்படுகின்றது தீ காண்பதற்கு உருவமாகத் தெரிகின்றது. அதேநேரத்தில் கையாற் பிடிக்கமுடியாது அருவமாகவும் தெரிகின்றது. தீயானது. இறைவனுடைய அருவுருவத் திருமேனியை ஒத்திருக்கின்றது ஆகவே அருவுருவத் திருமேனியாக விளங்கும் சிவலிங்கத்தைத் தழற் பிழம்பு என்று சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் கூறியுள்ளார்.

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்
நாணாது நேடியமால் நான்முகனும் காண நடுச்
சேணுருந் தழற்பிழம்பாய்த் தோன்றியதுந் தெளிந்தாராய்.

## 2 ஸ்ரீமாதுமையம்பாள்

சிவஸ்தலங்களில் அம்பாளுக்குத் தனிச் சந்நிதி அமைந்திருக்கும். இங்கு அம்பாளின் கருவறையில் மாதுமையின் சிலாவிக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு கையில் ஜெபமாலையும், மறுகையில் நீலோற்பல மலரும், மற்றிரு கைகளும் அபயம், வரதமாகச் சதுர்ப்புஜங்களோடு மாதுமையம்பாள் எழுந்தருளியிருக்கின்றார். அம்பாளுக்குரிய எழுந்தருளி விக்கிரகம் தேவசபையில் வைக்கப்பட்டிருக்கின்றது. திருவடிகளில் சரணமடையும்படி காட்டுவது வரதகரம், சரணடைந்தோரை அருள்பாலித்துக் காப்பது அபயகரம்.

அக்கினி சுவாலைவிட்டு எரியும்போது, அக்கினி சிவப்பு நிறமாகவும், அதன் கொழுந்தில் நீலவண்ணமும் காணப்படுவது போல சிவபெருமான் செம்மேனி எம்மானாகவும், சக்தி நீலவண்ணத்தளாகவும் இருப்பதாகச் சாஸ்திரங்கள் கூறுகின்றன நீலி என்று அம்பாளுக்கு ஒரு திருநாமமும் உண்டு அக்கினியில் சூடு பிரிக்கமுடியாமலிருப்பதுபோல சிவபெருமான் கருணைவடிவான சக்தியுடன் பிரிப்பின்றி இரண்டறக் கலந்திருக்கின்றார். அந்தச் சக்தியானது பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்று காரியவேறுபாட்டினால் பல பெயர்களையும், பல வடிவங்களையும் கொள்கின்றாள் என்று சைவாகமங்களும், தோத்திரங்களும் கூறுகின்றன. அண்டங்கள் அனைத்தும் சிவசக்திமயமாய் இருக்கின்றன. பிரபஞ்சம் முழுவதும் சக்தியின் சொரூபமாகும். பஞ்சகிருத்தியங்களும் பராசக்தியின் அருளாலேயே நடைபெறுகின்றன அறக்கருணையினாலும் மறக்கருணையினாலும் ஆன்மாக்களை ஆண்டு அருள்புரியும் அன்னையை இத்தலத்தில் மாதுமையம்பாள் எனக்கொண்டு வழிபட்டு வருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தலத்திற்குத் தேவாரம்பாடிய திருஞானசம்பந்தர் மாதுமையம்பாளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

> கடிதெனவந்த கரிதனையுரித்து அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்
> பிடியன்ன நடையாள் பெய்வளைமடந்தை பிறைநுதலவளொடுமுடனாகிக்
> கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து கொள்ளமும் நித்திலம் சுமந்து
> குடிதனை நெருக்கிப் பெருக்மாய்த் தோன்றும் கோணமாமலை அமர்ந்தாரே

பிடி என்பது பெண்யானை அன்ன - என்பது உவமை உருபு. பெண்யானைபோன்ற நடையினை உடையவள் மாதுமையம்பாள் என்று கூறுகின்றார். அன்னம்போன்ற நடையினை உடையவள் என்று பொருள்கொள்வது தேவாரத்தின் பொருளைத் திரிபுபடுத்துவதாகிவிடும். தெட்சணகயிலாய புராணம் மாதுமையம்பாளைப் பற்றி விரிவாகக் கூறுகின்றது.

> பார்புரந்த திருவடியும் அடியவர்கள் ஈடேறும்படியே பைம்பொற்
> தார்புரந்த வடிவழகும் அழகெழு மங்கலநாணும் தயங்குசோதிக்
> கார்புரந்த கருங்குழலும் வெண்ணகையும் செவ்விதழும் கருணைக் கண்ணும்
> சீர்புரந்த பிடியன்ன மென்னடை அம்பிகைபாதம் சிந்தை செய்வாம்.

## 3. நடேசர்

நடன ஈசர் நடேசர் எனப்படுகின்றார். இது சிவமூர்த்தங்களிலொன்று. சிவாகமங்கள் விளக்கிக் கூறும் தத்துவங்களையெல்லாம் தனது திருமேனியிற் கொண்டுள்ள அற்புதத் திருவுருவம் நடேசர். இதற்குமேலான அர்த்தபுஷ்டியுள்ள அழகுத் திருவுருவத்தை உலகத்தில் காண்பது அரிது. இந்துசமய மெய்ஞ்ஞானத் தத்துவங்களையும், மேலை நாட்டு விஞ்ஞானத் தத்துவங்களையும் ஆராயும் பேராசிரியர்கள் இந்தத் திருவுருவ அமைப்பை வியந்து பேராச்சரியமடைகின்றார்கள்.

> தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
> சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்
> ஊன்று மலர்ப் பாதத்தே உற்ற திரோதம் முத்தி
> நான்ற மலர்ப் பாதத்தே நாடு.

பஞ்ச கிருத்தியங்களையும், பஞ்சாட்சரங்களையும் தத்துவப் பேராசிரியர்கள் நடேசருடைய திருமேனியிலே காட்டுகிறார்கள்.

| | சூக்கும பஞ்சகிருத்தியம் | சூக்கும பஞ்சாட்சரம் |
|---|---|---|
| வலதுகையிலே துடி | - படைத்தல் | சிகாரம் |
| அபயத் திருக்கரம் | – காத்தல் | வகாரம் |
| அக்கினி ஏந்தியகை | – அழித்தல் | யகாரம் |
| ஊன்றிய திருவடி | – மறைத்தல் | நகாரம் |
| தூக்கிய திருவடி | – அருளல் | மகாரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தத்துவங்களைக் கொண்டு ஆடும் ஆட்டம் ஞான நடனம் எனப்படும். இதனை ஞானியர்கள் ஞானத்தால் அறிந்து கொள்வார்கள். ஆன்மாக்களை ஆட்கொள்ளும் வண்ணம் நடேசர் ஊன நடனமும் ஆடுகின்றார். இதனைத் தூலபஞ்சாக்கரத்தில் விளக்குவார்கள். தூலபஞ்சாக்கரம் - " நமசிவாய " திருவடியிலே, நகாரம், உதரம் – மகாரம், தோள்-சிகாரம், திருமுகம் - வகாரம், திருமுடி-யகாரம். என்று இவ்வாறு திருவடியிலிருந்து திருமுடிவரை தூல பஞ்சாக்கரம் விளக்கப்படுகின்றது. நடராஜரை விட்டு நீங்காத திருவாசி - ஓங்காரம். நடேசருடைய சக்தியாகிய சிவகாம சுந்தரியானவள் இடது பக்கத்தே நின்று இந்த ஆனந்த நடனத்தைக் கண்டு களிக்கின்றார். இந்த ஆடலைக் கண்டு வழிபடுவர்களுக்குப் பிறப்பில்லை.

சிவாலயங்களில் வடக்குமுகமாயமைந்த தனிச் சந்நிதியிலே நடேசர் பிரதிஷ்டை செய்யப்படுவார். அவருக்கு வருடத்தில் ஆறு தினங்கள் மட்டுமே அபிசேகம் நடைபெறும் சித்திரைத் திருவோணம், ஆனி உத்தரம், ஆவணி, புரட்டாதி, மாசி பூர்வ சதுர்த்தசி. மார்கழி திருவாதிரை என்பன அவை. இவற்றில் திருவாதிரை மிக விசேடமான நாள். பதஞ்சலி, வியாக்கிரபாதர் இருவரும் நடேசரின் ஆட்டத்தைக் கண்டு களித்துநிற்கின்றார்கள். சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சமய குரவர்கள் நால்வரும் நடேசரைப் பாடித் துதித்து முத்திபெற்றார்கள்.

குனித்த புருவமும் கொல்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே.

## 4 நவக்கிரகங்கள்

சிவஸ்தலங்களில் நவக்கிரகங்களுக்குத் தனியாகக் கோவில் அமைக்கும் வழக்கம் இருந்துவந்தது, பிற்காலத்தில் பிள்ளையார் கோவில், முருகன்கோவில்களிலும் நவக்கிரகங்களுக்குத் தனிச் சந்நிதி அமைக்கத் தொடங்கினார்கள். சூரியன், சந்திரன், செவ்வாய் (அங்காரகன்), புதன், வியாழன் (குரு), வெள்ளி (சுக்கிரன்) சனி, ராகு, கேது, என்பன நவக்கிரகங்கள். இவைகள் சோதிட சாஸ்திரத்தில் பிரதான இடத்தைப் பெறுகின்றன. சிவபெருமானே சூரியனாகவும், உமையம்மையார் சந்திரனாகவும், சுப்பிரமணியர் செவ்வாயாகவும், திருமாலே புதனாகவும், பிரம்மாவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாழனாகவும், இந்திரனே வெள்ளியாகவும், யமதருமனே சனி யாகவும், பத்திரகாளியே இராகுவாகவும், சித்திரகுப்தனே கேது வாகவும் இருப்பதாகச் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

கிரக என்றால், பிடி என்று பொருள் அமானுஷ்ய சக்தி யால் சீவராசிகளைத் தங்கள் பிடிப்பில் வைத்துக்கொண்டிருப்ப தால் இவர்கட்குக் கிரகங்கள் என்று பெயர் வழங்கலாயிற்று. நவக்கிரக வழிப்பாட்டைப்பற்றி இருக்கு வேதம் விரிவாகக் கூறு கின்றது. பரப்பிரம்மம் காலபுருஷனாக வீற்றிருந்து நவக்கிரகங் களாகிய பாசங்களைக் கொண்டு ஜீவராசிகளைப் பிணித்து ஆட்டி வைக்கின்றார். நவக்கிரகங்களைப் பிரீதிசெய்யும் அர்ச்சனை, ஆரா தனை, சாந்தி முதலிய கருமங்களால் இறைவனை வழிபாடு செய் தலாகிய தத்துவம் சைவாகமங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. சூரியன் முதலான ஒன்பது கிரகங்களுக்கும் அதிகாரபலத்தை அளிப்பவர் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானே ஆதலால் சிவனடியார்களுக்கு நாளும், கோளும் கேடுசெய்யாதென்று திரு ஞானசம்பந்தர் பாடியருளிய கோளறுபதிகத்தில் கூறியுள்ளார். "ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, பாம்பிரண்டு முடனே ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரெவர்க்கும்" என்பது அவர் வாக்கு. கோளறுபதிகத்தைப் பாராயணம்பண்ணி நவக்கிரகங்களைப் பிரீதிசெய்துவந்தால் அவை களால் நமக்குக் கேடுவராது.

**சூரியன்** - கிழக்குமுகமாக வீற்றிருப்பவர். சிந்தூர நிறத்த வர். சிந்தூரநிற ஆடை புஷ்ப்பம் தரித்திருப் பவர்.

**சந்திரன்** - சூரியனுக்கு தென்கிழக்கில் மேற்முகமாக வீற் றிருப்பவர். வெள்ளை நிறத்தவர். வெண்ணிற ஆடையும் புஷ்ப்பமும் தரித்திருப்பார்.

**செவ்வாய் (அங்காரகன்)** - சூரியனுக்குத் தெற்கில் தெற்குமுகமாக வீற்றி ருப்பவர். அக்கினிபோன்ற மேனியர். சிவந்த ஆடை, பூ தரித்திருப்பார்.

**புதன்** - சூரியனுக்கு வடகிழக்கில் வடக்கு முகமாக வீற் றிருப்பார். பச்சை நிறத்தவர். பச்சை ஆடை, மஞ்சட்பூ தரித்திருப்பார்.

**வியாழன் (குரு)** - சூரியனுக்கு வடக்கில், வடக்குமுகாக வீற்றிருப் பவர் பொன்னிற மேனியர் மஞ்சளாடை, மஞ் சட்பூ தரித்திருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வெள்ளி (சுக்கிரன்) | - | சூரியனுக்குக் கிழக்கில், கிழக்குமுகமாக வீற்றிருப்பார். வெண்மை நிறத்தவர். வெள்ளை ஆடை. வெள்ளைபூ தரித்திருப்பார். |
| சனி | - | சூரியனுக்கு மேற்கில் மேற்குமுகமாக வீற்றிருப்பார். கரிய மேனியர். கரிய ஆடை, தரிப்பவர். |
| ராகு | - | சூரியனுக்குத் தென்மேற்கில் தெற்முகமாக வீற்றிருப்பார். கருநிற ஆடை, தரிப்பவர். |
| கேது | - | சூரியனுக்கு வடமேற்கில் தெற்குமுகமாக வீற்றிருப்பவர், புகைவண்ணர். பலநிற ஆடை, பலநிறப் பூக்கள் தரிப்பவர். |

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனிபாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரெவர்க்கு மிகவே.

## 5 தேவசபை எழுந்தருளி மூர்த்திகள்

ஆலயங்களில் வசந்தமண்டபம் என்று ஒன்று அமைந்திருக்கும். அந்த மண்டபத்தில் எழுந்தருளி மூர்த்திகள் அமர்த்திருப்பார்கள் இந்த ஆலயத்தில் வசந்தமண்டபம் தேவசபை என்னும் சிறப்புப்பெயரோடு விளங்குகின்றது இச்சபையில் பிள்ளையார், சோமாஸ்கந்தர், மாதுமையம்பாள், போகசக்தி, ராஜராஜேஸ்வரி, சந்திரசேகரரும் அம்பாளும், வள்ளிதெய்வானை சமேத சுப்பிரமணியர், சண்டேஸ்வரர் என்னும் திருவுருவங்கள் காணப்படுகின்றன.

கி. பி 1624ஆம் ஆண்டு போத்துக்கீசர் கோணேசர் கோயிலை அழித்தபோது அக்காலத்திலிருந்த சிவாச்சாரியர்களும், அடியார்களும் இவ்வாலயத்தின் எழுந்தருளி மூர்த்தங்களை அன்னியர்கையில் அகப்படாமற் காப்பதற்காக எடுத்துச் சென்று நிலத்திலும், குளங்களிலும், கிணறுகளிலும் மறைத்து வைத்தார்கள். முன்நூற்றுமுப்பது வருடங்களின்பின் திருவருட் செயலாகச் சில மூர்த்தங்கள் நிலத்திலிருந்து கிடைத்தன. குளக்கோட்டு மன்னன் திருப்பணிசெய்த கோவிலிலிருந்த மூர்த்திகளுள் பிள்ளையார், சோமாஸ்கந்தர், அம்பாள், போகசக்தி, சந்திரசேகரர், அன்னம் என்பன கிடைக்கப் பெற்றன அருட்பொலிவும், அழகும் நிறைந்த அற்புதத் திருவுருவங்கள் இத்தேவசபையில் இருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன. 1963ஆம் ஆண்டு முதற் கும்பாபிஷேகம் நடைபெற்றபோதும் அதன்பின்னரும் செய்யப்பெற்ற பிள்ளையார், சுப்பிரமனியர், சந்திரசேகரர், ராஜராஜேஸ்வரி சண்டேஸ்வரர் என்பவர்களுடைய புதிய திருவுருவங்களும் இத்தேவசபையில் இருக்கின்றன. சோமாஸ்கந்தரும், அம்பாளும், பாலமுருகனும், சேர்ந்திருப்பது சோமாஸ்கந்த மூர்த்தம். இது எந்தத்தலத்தில் இருக்கின்றதோ அந்தத் தலத்து மூர்த்தி. அம்பாளுடைய திருநாமத்தைப் பெறுகின்றது. கோணேஸ்வரத்தில் சுவாமி பெயர் - கோணேசர். அம்பாள் பெயர் மாதுமை. இதனுல் இம்மூர்த்தமே மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமான் என்று வழிபடப்பெற்று வருகின்றது.

ஒருகையில் மானும், மறுகையில் மழுவும், அபயம், வரதமாகிய மற்றிருகைகளுடன் சதுர்ப்புஜங்கள் உடைவராகக் கோணேசப் பெருமானும், நீலோற்பல மலர் தாங்கிய அபய கரமும், வரத கரமுங்கொண்ட துவி புஜங்களோடு மாதுமையம்பாளும், தேவசபையில் வீற்றிருக்கின்றர். இத்தகைய அற்புத அமைப்பையுடைய திருவுருவங்கள் இந்தியாவில் நெல்லூரிலும், மேட்டூரிலும் மாத்திரமே காணப்படுகின்றன. அங்கேயுள்ள திருவுருவங்கள் அம்பாள் இடக்கரத்தை ஆசனத்தில் ஊன்றியபடி இறைவனும் தேவியும் ஒரேபீடத்தில் அமர்ந்திருக்கின்றனர். இங்கு தனித் தனிப் பீடத்தில் சுவாமியும் அம்பாளும் அருட்பொலிவோடு அமர்ந்திருக்கின்றனர். இத்தகைய அமைப்பை வேறெங்கும் காண்பது அரிது.

செய்ய மலர்த் தாளழகும் தாள்மீதிற் சிலம்பழகும் சிறுமானேந்தும்
கையழகும் மழுவழகும் திருமார்பின் நூலழகும் கருணைப் பார்வைத்
துய்யமுக மலரழகும் புன்முறுவல் நகையழகும் துலங்கித் தோன்றும்
ஐயனுயர் கைலைமலை முதல்வனையெம் இதயமலரமுழ்த்துசிற்பாம்.

## 6 வைரவர்

ஆலயங்களில் காவல்தெய்வமென இவர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். ஆலயங்களிலுள்ள அர்த்தசாமப் பூசை முடிவுற்றபின் திருக்கதவுகள் அடைக்கப்பட்டு திறப்புகள் எல்லாவற்றையும் வைரவர் சந்நிதியில் ஒப்படைப்பது சம்பிரதாயமாக இருந்துவருகின்றது. ஸ்தம்ப மண்டபம் வசந்த மண்டபங்களுக்கிடையில் யாகசாலைக்கருகே வைரவருக்குத் தனிச் சந்நிதியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைரவர் என்றும் இவர் பெயர் பெறுவர். இவரை முழு முதற் பொருளாக வழிபடுவோர் "பைரவம்" என்ற சமயத்தைச் சார்ந்தவராவர். பைரவம் என்பது சைவ சமயத்தின் உட்பிரிவுகளிலொன்று வைரவர் சிவமூர்த்தங்களில் ஒன்று. இவருடைய தோற்றம் நீலநிறம். திருவடிகளில் சிலம்பு, மார்பில் தலைமாலை, கைகளில் சூலம், மழு பாசம், உடுக்கை, இவைகளைத் தரித்திருப்பார். முக்கண்கள், கோரைப் பற்கள், செஞ்சடை, சீற்றங் கொண்ட முகத்தையும் உடையவர்.

படைத்தற் கடவுளாகிய பிரமனுக்கு முன்னர் ஐந்து தலைகள் இருந்தன ஒரு சந்தற்பத்தில் பிரமன் சிவபெருமானை இகழ்ந்த காரணத்தால் மேல் நோக்கி இருந்த அந்தத் தலையைத் கிள்ளி அவனுடைய செருக்கை அழிக்க வைரவரைச் சிவபெருமான் தோற்றுவித்தார். வைரவர் பிரமனுடைய மேல்நோக்கிய தலையைக் கிள்ளி அதன் ஓட்டில் செருக்குமிகுந்த முனிவர்கள், தேவர்களின் இரத்தத்தைப் பிச்சையாக ஏற்று அவர்களின் செருக்கை அடக்கி நல்லுணர்வு பெறச்செய்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.

வைரவக் கடவுள் ஊழியிறுதியில் சிவபெருமானுடைய ஆணையால் யாவற்றைவும் அழிப்பார். இவருக்கு நான்கு வேதங்களும் நாய்வடிவுடன் வாகனமாக இருக்கின்றன பூதப் பிசாசுகளிலிருந்தும், நோய், துன்பம், கொடுமைகளிலிருந்தும் நம்மைக் காப்பவர் வைரவர்.

பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## 7. சூரியன்

ஆலயத்தின் பிரதான வாசல்வழியாக உட்பிரவேசிக்கும் போது சூரியன் சந்நிதி வலப்பக்கம் அமைந்திருக்கும் உள்ளே சூரியன் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றார். சரீரத்தின் நடு நாடியாகிய சுழுமுனை நாடியின் வலப்பக்கத்தில் அமைந்திருக்கும் பிங்கலை நாடியைப்போல ஆலயத்தில் சூரியன் கோயில் அமைந்திருக்கின்றது. சோதிட சாஸ்திரத்தின்படி சூரியன் பித்ருகாரகன். பன்னிரண்டு ராசிகளில் 1 – 2 – 7 ஆம் இடங்களைச் சுபஸ்தானமாக உடையவர். ஆதலால் ஜன்மம், குடும்பம், களத்திர சுகத்தை பெறுவதற்குச் சூரியமூர்த்தியை வழிபாடு செய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. நாகதம்பிரான்

சூரியன் சந்நிதிக்கருகே நாகதம்பிரான் கோயில் இருக்கிறது. உள்ளே பஞ்சமுக நாகதம்பிரான் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றூர். ஆதித் திராவிடர்கள் நாக வழிபாடு செய்துவந்தார்கள். சரீரத்தின் மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியானது நாகம்போலச் சுருண்டிருப்பதாகவும், யோகசாதனையினுல் குண்டலினி சக்தியை சுழுமுனுநாடி வழியாக சகஸ்ராரத்திற்கு எழுப்பும் போதுஅந்தச் சக்தியானது பாம்புபோல் வளைத்து மேலே செல்லும் என்று யோகசாஸ்திரம் கூறுகின்றது. யோகசாதனையினுல் குண்டலினி சக்தியைப் பிரகாசிக்கச் செய்யவேண்டும் என்பதை உணர்த்துவதற்காக நாகதம்பிரானுக்குத் தனிச் சந்நிதி அமைக்கப்பட்டிருக்கின்றது. நாகதோஷம் நீங்குவதற்காக நாகதம்பிரானை வழிபடுவார்கள்.

## 9. சந்திரன்

ஆலயத்தின் பிரதான வாசல்வழியாக உட்பிரவேசிக்கும் போது இடப்பக்கமாய் அமைந்திருக்கும் சந்நிதி. உள்ளே சந்திரன் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றூர். சரீரத்தின் நடுநாடியாகிய சுழுமுனுநாடியின் இடப்பக்கத்தில் அமைந்திருக்கும் இடகலை நாடியைப்போல ஆலயத்தின் இடப்பக்கத்தில் சந்திரனுக்குச் சந்நிதி அமைந்திருக்கின்றது சோதிட சாஸ்திரத்தின்படி சந்திரன் மாத்துருகாரகன். பன்னிரண்டு ராசிகளில் 1 – 5 - 6 – 7 – 10 ஆம் இடங்களைச் சுபஸ்தானமாகவுடையவர். சந்திரனுக்குப் பிரீதிசெய்து சந்திர தோஷத்தை நீக்குவதற்காக வழிபாடு செய்வார்கள். இதனுல் இவருக்குத் தனிச்சந்நிதி அமைந்திருக்கின்றது.

## 10. கொடிஸ்தம்பம்

மூலமூர்த்தியை ஆவாகனம் செய்யும் இடங்களிலொன்று. மகோற்சவ காலத்தில் இதில் கொடியேற்றப்படும். சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களாகிய புறச் சார்பை நோக்காது சர்வ சங்கார காலத்தின் முடிவில் சிவபெருமான் தனது சக்தியைத் தனக்குள்ளே அடக்கிக்கொண்டு நிற்கும் சொரூபநிலையைக் குறிப்பது ஸ்தம்பம். மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியானது எழுந்து செல்லும் சுழுமுனுநாடிபோல அமைந்தது ஸ்தம்பம் என்றும் கூறப்படுகின்றது. இதனுலேயே ஸ்தம்பத்தினடியிலுள்ள கணபதியை மூலாதார கணபதி என்பார்கள். மூலாதாரத்தின் அதிஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டான தேவதை ஸ்தம்ப கணபதி. மகோற்சவ காலத்தில் கொடி யேற்றியிருக்கும்போது கொடிமரம் பதியாகிய சிவபெருமானையும். கொடிக்கயிறு திருவருட் சக்தியையும், கொடிச்சீலை பசுவையும், தருப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆன்மா பாசபந்தம் நீங்கிச் சிவபெருமானை அடையுமிடத்துத் திருவருட்சக்தி வாயிலா கவே அடைதல் வேண்டும் என்பதை இது உணர்த்துகின்றது.

## 11 பலிபீடம் நந்தி

கோயில்களில் பலிபீடத்தில் மூலமூர்த்தியைப் பார்த்தபடி அமர்ந்திருப்பவர் நந்திதேவர். மூலமூர்த்தி எதுவோ அதன் வா கனமே நந்தியாக வைக்கப்பட்டிருக்கும். நந்தி-எருது. இது முத்தி பெற்ற ஆன்மாவைக் குறிப்பதென்றும் கொள்ளப்படும். ஆன் மாக்கள் பலிபீடத்தில் மும்மலங்களையும் பலிகொடுத்து மலநீக்கம் பெற்றபின் சிவத்தை நோக்கியிருக்கும் என்பதை நந்தி விளக்கு கின்றது. அதிகாரநந்தி வைக்கப்படாத ஆலயங்களில் இவரே அதிகார நந்தியாயிருப்பார். வருடந்தோறும் வரும் இருபத்தி ஞன்கு பிரதோஷங்களிலும் இவர் விசேடபூசை பெறுவார். திருப்பாற்கடலில் எழுந்த ஆலகால விஷத்தை உண்டு உயிர் களைக் காத்த சிவபெருமான் இந்த நந்தியின் இருகொம்புகளுக் கிடையிலே எழுந்தருளியிருந்தார். ஆதலால் மூலமூர்த்தியை வழி படுபவர்கள் நந்தியின் இரு கொம்புகளுக்கூடாகத் தெரிசனம் செய்வார்கள்.

## 12 சேக்கிழார்

சிவனடியார்கள் வழிப்பாட்டுக்குரியவர்கள். "மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரவெனத் தொழுமே" என்று சைவசித்தாந்தம் கூறும். சிவனடியாரை வழிபடுதல், சிவனை வழிபடுவதற்கு ஒப்பாகும்.

தொண்டைமண்டலத்திலே புலியூர்க் கோட்டத்திலே குன் றத்தூரிலே, சேக்கிழார்குடியென்னும் சிறந்த வேளாண்மரபிலே வெள்ளியங்கிரியாருக்கும் அழகாம்பிகைக்கும் பிறந்தபிள்ளை சேக் கிழார். பிள்ளைத் திருநாமம் அருண்மொழித்தேவர் கல்வி, கேள்வி, நல்லொழுக்கம், ஈஸ்வரபக்தி, அடியார்பக்தியிற் சிறந்த இவரை சோழப் பேரரசனுகிய இரண்டாம் குலோத்துங்கன் தனக்கு முதன்மந்திரியாக நியமித்து "உத்தம சோழப் பல்லவன்" என் னும் பட்டத்தையும் அளித்துக் கௌரவித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனடியார்களைப் பற்றியும், திருமுறைகளின் பெருமைகளைப்பற்றியும் அறிந்திருந்த சோழமன்னனின் வேண்டுகோட்படி திருத்தொண்டர்களின் சீர்பரவும் பெரியபுராணத்தைப் பாடுவதற்காகச் சிதம்பரத்திற்குச் சென்றார். புராணத்தைப் பாடத் தொடங்குவதற்காக ''உலகெலாம்'' என்று நடராஜப்பெருமான் அடியெடுத்துக் கொடுக்க, சிவபக்தியில், அடியார்பக்தியில் மூழ்கியிருந்து ஒருவருடத்தில் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணத்தைப் பாடியருளினார். இதனையறிந்த சோழமன்னன் சேக்கிழாரையும், பெரியபுராணத்தையும் தமது பட்டத்து யானையிலேற்றித் தான் பின்னேயிருந்து கவரிவீசி வீதிவலம்வந்து விழா வெடுத்து ''தொண்டர்சீர் பரவுவார்'' எனும் திருநாமத்தை வழங்கி வணங்கினான். சேக்கிழார் சுவாமிகள் தில்லையிலே தங்கியிருந்து வைகாசிப்பூச நன்னாளிலே இறைவன் திருவடிநீழலை அடைந்தார்.

தூக்கு சீர் திருத்தொண்டத் தொகை விரி
வாக்கினாற் சொல்ல வல்ல பிரானெங்கள்
பாக்கியப் பயனாய் பதி குன்றை வாழ்
சேக்கிழா ரடி சென்னி யிருத்துவாம்.

★

## 13 சமயகுரவர்கள்

### சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூரர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

தமிழ்வேதமாகிய சைவத் திருமுறைகள் யாவும் திருவருள் பெற்ற சிவஞானச் செல்வர்களால் திருவாய் மலர்ந்தருளப் பெற்றவை சைவசமயத்தவர்களின் அரும்பெரும் செல்வங்களாக உள்ளவை. சைவசமயத்தவர்களின் வாழ்வில் சிவமணம் கமழச் செய்து, அருள்நெறிக்கு அவர்களை இட்டுச் செல்வன சாஸ்திரங்களும், தோத்திரங்களுமாகும். தோத்திரங்களை அருளிச்செய்தவர்களாகிய, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் இங்கு எழுந்தருளப்பெற்றுள்ளது, ஈழத்துச் சைவநன்மக்கள் இயற்றிய தவமாயமைந்துள்ளது.

ஈழநாட்டின் கிழக்கே தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம் திருக்கோணேஸ்வரம். இத்தலத்தில் எழுந்தருளியுள்ள மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமானை திருஞான சம்பந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியுள்ளார். போத்துக்கீசர் இத்தலத்திலுள்ள ஆலயத்தை இடித்தழித்த பின்னர், புதிய ஆலயம் அமைக்கும்வரை சுமார் முன்னூற்று நாற்பது ஆண்டுகளாக கோணேசப்பெருமான் திருக் கோணசலத் திருப்பதிகத்தில் ஆவாகனம் கொண்டிருந்தார். இத் திருப்பதிகம் இல்லையென்றால் கோணேஸ்வரத்தின் வரலாறு எங்கோபோய் மறைந்திருக்கும். இவ்வாறே இத்தலத்திற்குரிய புராணங்களும் ஆலயத்தின் வரலாறுகளுக்கு ஆதாரசக்திகளாக இருந்துவருகின்றன

மெய்யடியார்களாகிய இந்தப் பக்தமூர்த்திகள் ஆலயத் தில் பரிவார மூர்த்திகளாக அமர்ந்திருக்கின்றார்கள். தேவாரங் களாகிய முதலேழு திருமுறைகளையும் தேவார முதலிகளாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரரும் திருவாசகத்தை மாணிக்கவாசக சுவாமிகளும் அருளிச்செய்தார்கள். அவர்களின் குருபூசைத்தினங் களைப் பின்வரும் பாடலால் அறிந்துகொள்க.

பாடிய சம்பந்தர் வைகாசிமூலம் பயிலுமப்பர்
நீடிய சித்திரைமாதச் சதயம் நிறைவன்தொண்டர்
ஆடியிற் சோதி திருவாதவூரர் நல்லானி மகம்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசம் சிறந்தனரே,

## 14. திருமுறைகள்

ஆசையறுய் பாசம் விடாய் ஆன சிவபூசை பண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

திருமுறைகள் சிவசொரூபமானவை. மந்திரவடிவமானவை. வாழ்க்கை நெறியைக் காட்டும் ஞானக் கண்களாயுள்ளவை. திருக்கோவில் மூர்த்திகள்போல் தெய்வீகச் சிறப்பும் ஆற்றலு முள்ளவை. தேவாரம், திருவாசகம், திருக்கோவையார். திரு விசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் பாடியருளிய பதினோராந்திருமுறை, பெரிய புராணம் என்பன தமிழ்வேதமாகிய பன்னிரு திருமுறைகளாகும்.

திருமுறைகள் வழிபாட்டுக்குரியவை வழிபாடு செய்வோ ருக்குப் பயன்தருபவை. மக்களை மண்ணில் நல்லவண்ணம் வாழச் செய்து முத்தியின்பம் தருபவை. முன்னேற்றமடைந்து வெற்றி பெறுவதற்கு உறுதுணையானவை. "திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே" என்று திருஞான சம்பந்தர் கூறியுள்ளார். திருமுறைகளை ஓதுவதாலும் ஓதக் கேட்பதாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவி நீக்கம், வினைநீக்கம், பாவநீக்கம் பெறுவதோடு அருளாக்கமும் பெறலாம்.

மந்திர சொரூபமான திருமுறைகளில் சிவபெருமான் சாந்நித்தியம் கொண்டுள்ளார் என்று ஞானிகள் உணர்ந்து திருமுறை வழிபாடு செய்து வந்துள்ளார்கள். மக்கள் மனத்தை மாண்புள்ளதாகச் செய்து, ஞானப்பிளம்பாயுள்ள இறைவனை நினைக்கச் செய்து திருவருளைப் பெறுவதற்குத் திருமுறைகள் வழிகாட்டுகின்றன. பன்னிரு திருமுறைகளையும் திருஞானசம்பந்தர் முதலான இருபத்தேழு ஞானிகள் பாடியருளினுர்கள். இருபத்தேழு நட்சத்திரங்கள் பன்னிரண்டு இராசிகளில் அடங்குவது போல இருபத்தேழு ஞானிகளின் ஞானத்தெளிவுகளும் பன்னிரு திருமுறைகளில் அடங்கியுள்ளன. இவையாவும் சிவபெருமானின் திருவருள் வாக்குக்களாகும்.

> சைவத்தின் மேல் சமயம் வேறில்லைஅதில் சார் சிவமாம்
> தெய்வத்தின் மேல் தெய்வமில் என்னும் நான்மறைச் செம்பொருள்
> வாய்மை வைத்த சீர்திருத் தேவாரமும் திருவாசகமும்
> உய்வைத் தரச் செய்த நால்வர் பொற்றுள் எம் உயிர்த்துணையே,

## 15. நிருத்த கணபதி

நிருத்தம் என்பது நர்த்தனம், நடனம் எனப்படும். நர்த்தனம் ஆடிய கணபதியென இவர் வழிபடப்பட்டு வருகின்றுர். நடராஜப் பெருமானுடைய நர்த்தனம் பஞ்ச கிருத்தியங்களை உணர்த்துவது போல கணபதியின் நிருத்தமும் புராண வரலாற்றைப் பின்னணியாகக் கொண்ட பஞ்சகிருத்திய நடனமாகும்.

முன்னொருகாலத்திலே தேவர்கள் ஆவணி மாதச் சதுர்த்தியில் விநாயகக் கடவுளைப் பூசித்தார்கள். ஐங்கரக் கடவுளாகிய கணபதி ஆன்மாக்களிடத்திற் கருணை கொண்டு பஞ்சகிருத்திய நடனம் செய்தருளினுர். விஞயகப் பெருமான் நிருத்தமாடத் தேவர்கள் வணங்கியபோது சந்திரன் விநாயகருடைய சரிந்த பெருவயிற்றையும், குறுந்தாள்களையும், துதிக்கையிற் தாங்கிய மோதகத்தையும, பார்த்துச் சிரித்தான். அதனுல் சினங்கொண்ட கணேசர் "யாரும் காணுராய் நிந்தை செய்த நீ நீசர்போலாவாய்" எனச் சபித்தார். சாபத்துக்காளான சந்திரன் யாவராலும் ஒதுக்கப்பட்டு வெட்கித் தலைகுனிந்து ஒதுங்கித் திரிந்தான். இதனையறிந்த பிரம்மாதி தேவர்கள், கைலயங்கிரிக்குப் போய் விநாயகப் பெருமானை வணங்கிச் சந்திரன் தங்கள் சாபத்தால் நீசனுகி வருந்துகின்றுன். அவன் இவ்வுலகிற்கு வேண்டியவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாபவிமோசனம் தந்தருள வேண்டும். தாங்கள் கொடுத்த சாபத்தை ஒரு வருடத்தில் ஒரு நாளைக்கு அவன் அனுபவிக்கும் படி அருளுக என்றனர். இரக்கங்கொண்ட கணேசர் அவ்வாறே அருள் புரிந்தார். இதனால் ஆவணிமாத பூர்வபட்ச சதுர்த்தியில் உலகத்தவர் சந்திரனைப் பார்க்காது அன்றையத் தினத்தில் விநாயகருக்கு விசேட பூசைசெய்து வருகின்றார்கள்.

உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும் தறிநிறுவி உறுதியாய
தள்ளரிய அன்பென்னுந் தொடர் பூட்டி இடைபடுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினை பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழி சித்திவேழத்தை நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்.

## 16. தெட்சணா மூர்த்தி

சிவபெருமான் கல்லால் நீழலில் தெட்சணாமூர்த்தி என்னும் திருநாமம் உடையவராய் தென்முகமாக எழுந்தருளியிருந்து நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும் ஞானிகளாகிய சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், ஆகிய முனிவர்கள் நால்வருக்கும் வாக்கால் உரைக்காமல் சின்முத்திரை காட்டி அருளால் உணர்த்தியருளினர். வேத வேதாந்தங்களினால் தம்மையும், தலைவனையும் சந்தேக விபரீதமற உணரமாட்டாது, மயங்கிய மயக்கம் நீங்குதற்பொருட்டு வாக்கினால் இத்தன்மையதென்று சொல்லமுடியாத பூரணமாயும, உயிர்ப்பொருள், உயிரில்பொருள் யாவும் தன்னையன்றித் தனித்துநில்லாத தன்மையால் தானாகியும், அவற்றுக்கு வேறாகியும் இருந்த தமது சொரூபத்தை இருந்தபடி இருந்து காட்டி சின்முத்திரையால் சொல்லாமற் சொல்லியருளியவர் தெட்சணாமூர்த்தி.

தெட்சணாமூர்த்தத்தில் முயலகனை மிதித்த திருவடியும், வீராசனமாயுள்ள மற்றொரு திருவடியும், சின்முத்திரையும், உருத்திராக்கமும், அமுத கும்பமும், சிவஞானபோதமும், அமைந்திருக்கும். சின்முத்திரையே தெட்சணாமூர்த்தியின் சிறப்பான அம்சமாகும். திருக்கரத்திலுள்ள ஐந்து விரல்களுள் நடுவிரல் முதலாகப் பின் மூன்று விரல்களை வேறு பிரித்துச் சுட்டு விரலைப் பெருவிரல் அடிப்பாகத்தில் பொருந்தும்படி மடக்கி வைப்பதே சின்முத்திரை, பெருவிரலாகிய சிவத்தைச் சுட்டுவிரலாகிய ஆன்மா சார்ந்திருக்க ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களாகிய ஏனைய மூன்று விரல்களையும் ஆன்மாவிலிருந்து வேறுபிரித்துக் காட்டுவதாகிய குறியே சின்முத்திரை. ஓம் என்னும் பிரணவத்தின் மூலம் அடையப்பெறுபவரும், நிறைஞான மூர்த்தியும், அமைதியுடையவருமாயிருப்பவர் தெட்சணாமூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை செய்யும் காலத்திலும், சிவானுபவம் கைகூடும் காலத்திலும், மனதிற்கும் சரீரத்திற்கு விருப்பு வெறுப்பு முதலிய வற்றைத் தருகின்ற இராஜத, தாமத, குணங்களைச் சாராது சாந்தத்தைத் தருகின்ற சத்வகுணத்தைச் சார்ந்திருத்தல் வேண்டும். என்பதைகல்லால் நீழல் உணர்த்துகின்றது. சிறப்புவாய்ந்த கல்லால் விருட்சம் திருக்கோணேஸ்வரத்தின் ஸ்தல விருட்சமாயிருப்பது இந்தத் தலத்தின் சிறப்பு அம்சமாகும்.

கல்லாவின் புடையமர்ந்து நான்மறை ஆறங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்

ஓம்
சிவ சிவ

## 17. ஸ்ரீ மகா கணபதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினல்
கண்ணிற் பணிமின் கனிந்து.

இந்துக்களின் வழிபாட்டில் முதலிடம் பெறும் மூர்த்தி ஸ்ரீ மகா கணபதி, பிள்ளையார், விநாயகர், விக்னேஸ்வரர், கணேசர், வக்ரதுண்டர், லம்போதரர், ஏரம்பர் என ஐம்பத்தொரு திருநாமங்களை உடையவர். பிரணவப்பொருளான ஓங்காரத்தின் தத்துவ வடிவமானவர் ஆதலால் "ஓங்காரத்துள்ளே உதிக்கும் பரம் பொருளே" என்று துதித்து இவரை வழிபடுவார்கள். அவருடைய திருமுகமும் துதிக்கையும் ஓங்கார வடிவமாய் அமைந்திருப்பதைக் காணலாம்.

மனோவாக்குக்கு எட்டாதவராய், ஞானத்திற்கும், வீடு பேற்றுக்கும் மூலாதார மூர்த்தியாயிருப்பதால் மகா கணபதியெனப் பெயர் பெற்றவர். சிவதத்துவம் யாவும் மகா கணபதியில் அடங்கியிருப்பதால் சிவம் வேறு கணபதி வேறல்ல, அஃறிணைப் பொருளாகிய ஆனைமுகமும், உயர்திணைப் பொருளாகிய மனித உடலும் நான்கு கைகளோடு துதிக்கையுங்கொண்ட பஞ்ச கரங்களையுமுடைய அற்புதத் திருமேனியைத் தாங்கி ஆணுமல்ல பெண்ணுமல்ல அலியுமல்லாத திருவுருவமுடையவர் மகா கணபதி.

அணுமுதல் அண்டம்வரையுமுள்ள பிரபஞ்சம் அனைத்தையும் தமது உதரத்திலடக்கிய பேழைவயிறுடையவராதலால் லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதரர் எனப்படுகின்றார். எறும்பு முதல் யானையீறாகவுள்ள பகுத்தறிவற்ற பிராணிகளையும், பகுத்தறிவுள்ள மனிதர் முதல் தேவர் வரையிலான யாவரையும் தமது அறக் கருணையினாலும் மறக்கருணையினாலும் காக்கும் தெய்வம் மகா கணபதி.

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழ
பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

## 18. இலிங்கோற்பவர்

இறைவன் அருவத்திருமேனி, உருவத்திருமேனி, அருவுருவத்திருமேனிகளாக மூன்று திருமேனிகளையுடையவர். கண்ணுக்குப் புலப்படாதது அருவத்திருமேனி. கண்ணுக்குப் புலப்படும் படியான அங்கங்களை (கை, கால், தலை, உடல்) உடையது உருவத்திருமேனி. சிவலிங்கம் அருவுருவத்திருமேனி.

இறைவன் இலிங்கத் திருமேனியைத் தாங்கி ஆன்மாக்களுக்கு அருள் புரிந்ததைப் புராண, இதிகாசங்கள் விளக்கிக் கூறுகின்றன. பிரம்மாவும், விஷ்ணுவும் தாம் தாம் பெரியவர்கள் என்று அகங்காரங்கொண்டு தமக்குள் மாறுபட்டு வாதப் பிரதிவாதங்கள் பேசினர். இவர்களுடைய அறியாமையைப் போக்கத் திருவுளங்கொண்ட சிவபெருமான் இருவருக்குமிடையே சோதிவடிவாகத் தோன்றினார். ஆதியும் அந்தமும் இல்லாத அந்தச் சோதிப்பிளம்பின் அடியையும் முடியையும் யார் காண வல்லவரோ அவரே பெரியவரென்று பிரம்மாவும், விஷ்ணுவும் தமக்குள் ஒரு உடன்பாட்டுக்கு வந்தார்கள். அதன் படி பிரம்மா முடியைத் தேடியும், விஷ்ணு அடியைத் தேடியும் சென்றனர். பிரம்மா அன்னப்பட்சியாகி ஆகாயத்தில் பறந்து சென்று தேடினார். விஷ்ணு வராக வடிவமாகிப் பூமியைப் பிளந்துசென்று தேடினார். பல்லாண்டுகளாகத் தேடியும் அடியையும் முடியையும் காணாத இருவருடைய அகங்காரத்தைப் போக்கிச் சிவபெருமான் இலிங்கவடிவமாகத் தோன்றி இருவருக்கும் காட்சிகொடுத்தார். இதுவே இலிங்கோற்பவமாகும்.

இறைவன் ஆதியந்தமில்லாத அருட்பிழம்பு என்னும் தத்துவத்தை விளக்குபவர் இலிங்கோற்பவர். சிவாலயங்களில் கருவறையின் வெளிச் சுவரில் மேற்குத் திசையிலுள்ள கோஷ்டத்தில் இலிங்கோற்பவத் திருமேனியைப் பிரதிஷ்டை செய்திருப்பதைக் காணலாம். அந்த லிங்கத்தின் மேற்பாகத்தில் பிரம்மாவை அன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவிலும், விஷ்ணுவை அடிப்பாகத்தில் வராகவடிவிலும் (பன்றி) சிவபெருமானை இலிங்கத்தின் நடுவிலும் காணலாம்.

சிவராத்திரி நள்ளிரவில் பன்னிரண்டுக்கும் ஒருமணிக்குமிடையில் இலிங்கோற்பவருக்கு விசேட பூசை வழிபாடுகள் செய்வார்கள். கார்த்திகைக் கார்த்திகையில் ஆலயங்களில் நடைபெறும் சொர்க்க பாவனையும் இலிங்கோற்பவ தரிசனத்தையே குறிப்பதாகும். ஆன்மாக்கள் அகங்காரத்தை ஒழித்து அருள் நெறியில் வழிபட்டு உய்யவேண்டுமென்பதைக் குறிப்பிடுபவர். இலிங்கோற்பவர்.

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடி
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிரார்காண் சாழேலோ.

## 19. பிரம்மா

இந்துசமய வழிபாட்டில் முதன்மை பெற்றிருக்கும் மூன்று தெய்வங்களுள் படைப்புத் தொழிலைச் செய்யும் முதல்வன் பிரமன். வேதங்களிலும் வேதங்களை விளக்கும் நூல்களிலும்பிரமன் உலகமுழுவதிலும் அழியாமல் நிலைத்திருக்கும் பரம்பொருளாகக் கருதப்படுகின்றான். இருக்கு வேதத்திலும், அதர்வண, வேதத்திலும் சொல்லப்படும் விசுவகர்மன், இரணியகர்ப்பன், பிரசாபதி என்ற பெயர்களும் பிரமனைக் குறிப்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

புராண, இதிகாச வரலாறுகளில் பிரமனைப்பற்றி பல கதைகள் கூறப்படுகின்றன. உலகத்தைப் படைத்த பிரமன் உலக நீதியைப் பரப்புவதற்காக ஏழு முனிவர்களைப் படைத்தான். மரீசி, அத்திரி, அங்கீரசர், புலத்தியர், புலகர், கிரது, வசிட்டர் என்பவர்கள் அவர்கள். பிரமன் அன்னவூர்தியை வாகனமாக உடையவன். நான்கு தலைகளையும், நான்கு கைகளையும் உடையவன். சிவனுடைய தேரோட்டி. உலகத்து உயிர்களின் நன்மைக்காக திருப்பாற்கடலில் எழுந்த நஞ்சை சிவனை உண்ணும்படியாகத் தூண்டியவன். தன்னைத் துதிப்பவர்கள் தீயவர்களாயிருந்தாலும் அவர்கள் கேட்கும் வரங்களைக் கொடுப்பவன். திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றியதாகவும் கலைகளுக்கு அரசியாகிய சரஸ்வதியைச் சக்தி யாகக் கொண்டவராகவும் கூறப்படுகின்றார்.

சைவ, வைஷ்ணவ நூல்களில் பிரமனைப்பற்றிக் கூறும் பதிகங்களும் பாசுரங்களும் கணக்கற்றவை. மூவர் பாடிய தேவாரப் பதிகங்களில் பெரும்பாலும் ஒன்பதாம் பாடலில் பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைப் பாடியுள்ளார்கள். ஆன்மாக்கள் அகந்தையை ஒழிக்கவேண்டும் என்பதை உணர்த்த பிரம்மா, விஷ்ணுவுடைய வரலாறுகளை இப்பாடல்களில் கூறியுள்ளார்கள். பிரமனுக்குத் தனியாகக் கோவில் கிடையாது. சைவ, வைஷ்ணவக் கோவில்களில் வடக்குத் திசையில் கருவறையின் வெளிப்புறப்புரையில் பிரமனுடைய திருவுருவம் வைக்கப்பட்டிருக்கும்.

செங்கணானும் பிரமனும் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற்றேனென்று இலிங்கத்தே தோன்றினன்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

## 20 துர்க்காம்பிகை

பராசக்தியின் ஓர் அம்சாவதாரமாகத் தோன்றியவள் துர்க்காம்பிகை மாகாளி என்றும் அழைக்கப்படுவாள். வீரத்தையும். வெற்றியையும் அருளும் தெய்வம். மார்க்கண்டேய புராணத்திற் கூறப்படும் சண்டிதேவியும் இவளே. சண்டியைக் குறித்துச் செய்யப்படும் சண்டியாகத்தினால் பகைகள் விலகி வெற்றி கிடைக்குமென ஆகமங்கள் கூறுகின்றன.

பிரமனிடமிருந்து சாகாவரம் பெற்றவன் மகிஷாசுரன். மகிஷனால் தோற்கடிக்கப்பட்ட இந்திரன் முதலிய தேவர்கள் சிவனையும், விஷ்ணுவையும் தஞ்சமடைந்து தங்கள் துன்பங்களை யெடுத்துக் கூறினர். சிவனும், விஷ்ணுவும் அவர்கள் மீது இரக்கங்கொண்டு மகிஷாசுரனை அழிக்கவல்ல மகா சக்தியைத் தோற்றுவித்தனர். சிவன், விஷ்ணு என்பவர்களுடைய திருமுகத்திலிருந்து தேஜோமயமான ஒளிப்பிளம்புகள் வெளிப்பட்டன. அவ்வாறே இந்திரன், வருணன், அக்கினி வாயு, குபேரன், இயமன், முதலிய தேவர்களிலிருந்தும் சக்திகள் வெளிப்பட்டன. எல்லாச்சக்திகளும் ஒன்றுசேர்ந்து தோன்றிய சக்திகள் சமூகமாகிய மகாசக்தியே துர்க்காதேவியானாள். அந்தத் தேவியானவள் மகிஷாசுரனைக் கொன்று மகிஷாசுரமர்த்தனி எனவும் பெயர் பெற்றாள்.

துர்க்காதேவிக்குத் தனிச் சந்நிதிகள் பல இடங்களிலும் இருக்கின்றன. சிவஸ்தலங்களிலுள்ள சிவன்கோவில்களின் கருவறையின் வெளிப்புறத்தில் வடக்குத்திசைக் கோஷ்டத்தில் துர்க்காதேவியைப் பிரதிஷ்டை செய்து வழிப்பட்டு வருகின்றார்கள். கோணேசர் கோவிலிலும் இதனைக் காணலாம்.

தேவியின் பாதத்தின் கீழ் மகிஷத் தலை இருப்பதைக் காணலாம். மகிஷ சங்காரத்தை இது குறிக்கும். . துர்க்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்களில் தேவி சிங்கவாகனத்திலேறி மகிஷாசுரனை வீழ்த்தி அவன்மார்பில் திரிசூலத்தைச் செலுத்தி நிற்பவளாகக் காணப் படுகின்றாள். இந்தத் தேவியை வழிபடுவோர் தங்கள் பகைவரையும், தடைகளையும் வெல்லுவர். இராவணனைக் கொல்லும் பொருட்டு இராமர் துர்க்காதேவியை வழிபட்டாரெனக் கூறப் படுகின்றது. புரட்டாதி மாதத்தில் நடைபெறும் நவராத்திரி விழாவில் துர்க்காபூஜை சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

காளினி நீயே காமினி நீயே கார்த்திகை நீயே துர்க்கையளே
நீலினி நீயே நீதினி நீயே நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே மாதவி நீயே மான்விழியே
ரோக நிவாரணி சோக நிவாரணி தாப நிவாரணி ஜெய துர்க்கா.

## 21. ஸ்ரீ சுப்பிரமணியர்

விழிக்குத்துணை திரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத்துணை முருகாவெனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத்துணை அவன் பன்னிருதோளும் பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே,

முருகன், குகன், சண்முகன், குமரன், சரவணபவன், கார்த்திகேயன், என்று சுப்பிரமணியருக்குப் பல திருநாமங்களுண்டு. திருநாமங்களெல்லாம் காரணப் பெயர்களாயமைந் திருக்கின்றன. சுப்பிரமணியர் என்பது சுகத்தைத் தருபவர் எனப் பொருள்படும். சங்கரன் என்றாலும் சுகத்தைத் தருபவர் என்று பொருள். ''ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் நாமும் பேதகமன்று'' என்ற கந்தபுராணக் கூற்றின்படி சிவன் வேறு முருகன் வேறன்று. ஈசானம், தத்புருடம், வாமம் அகோரம், சத்தியோஜாதம், எனப்படும் சிவனுடைய ஐந்து திருமுகங்களிலும் அதோமுகத்திலுமுள்ள நெற்றிக் கண்களிலிருந்து தோன்றியவர் அறுமுகக் கடவுளாகிய முருகன்.

அடியார்கு நல்ல பெருமாளாகிய அறுமுகவள்ளல் எங்கும் என்றும் நன்மையே செய்யும் பரம கருணாநிதி. என்றும் அழியாத அழகும் இளமையுமுடைய முருகனின் திருவடியின்பம் அனுபவிக்க அனுபவிக்கத் தெவிட்டாதது. மேலும் மேலும் குறைவற்ற இன்பத்தைத் தருவது. அருள்தாகங் கொண்டார்க்குப் பேரின்பத்தைத் தருவது.

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், பழமுதிர்சோலை, திருத்தணி முதலிய விசேட தலங்களிலும், இலங்கையில் கதிர்காமத்திலும் எழுந்தருளியுள்ள வள்ளி, தெய்வானை சமேதராகிய சுப்பிரமணியப் பெருமான் திருக்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணேஸ்வரத்திலும் இருந்து அருள்பாலிக்கின்றார். இவரை ''நினைத்த காரியம் அனுக்கூலமே தரும் பெருமாளே'' என்று அருணகிரிநாதர் இந்தத் தலத் திருப்புகழில் கூறியுள்ளார். ஆழ்ந்து, அகன்று' நுண்ணிதாகிய வேல் முருகனது முக்கிய படைக்கலம். சூரபத்மன் முதலானஅசுர சங்காரத்தின் நிமித் தம் அவதாரம் எடுத்தவர் முருகன். மயில்வாகனத்தில் ஏறி வருபவரும், பிரணவ மந்திரத்தின் உடபொருளாயுள்ளவரும், அழகுவாய்ந்த திருமேனியை உடையவரும், மகான்களின் மனத்தை வீடாகக்கொண்டவரும், உபநிஷத்துக்களின் உட்பொருளும், பர மசிவனின் புத்திரனும்' உலகங்களைக் காப்பவருமாயுள்ளவர் சுப்பிரமணியர்.

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி
முன்னிய கருணை ஆறு முகப்பரம் பொருளே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்குமா மணியே போற்றி

## 22. சண்டேஸ்வரர்.

சைவ ஆலயங்களில் பூசைகள் யாவும் நிறைவேறியபின் கடைசியாகச் சண்டேஸ்வரருக்குப் பூசை நடைபெறும். சிவ பெருமானுக்குச் சமர்ப்பிக்கப்படும் நைவேத்தியம் முதலான நிர் மாலியங்களைச் சண்டேஸ்வரருக்குப் படைத்து பூசையை நிறை வேற்றுவார்கள். ஆலய வழிபாட்டின் பலன்களை அருளுபவர் சண்டேஸ்வரர். அவர் மகாயோகி. சதா சிவத்தியானத்திலிருப் பவர். ஆதலால் அவர் தியானத்திலிருந்து விழிப்புநிலைக்கு வரு வதற்காக, வழிபடுவோர் மெதுவாக விரலை நொடித்தோ, கைதட்டியோ விழிப்படையச் செய்து ஆலய வழிபாட்டின் பலனை அருளுமாறு வேண்டிக்கொள்வார்கள்.

இவர் பெரியபுராணத்திற் கூறப்படும் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். திருச் சேய்ஞ்ஞலூரில் அந்தணராகிய எச்சதத்தருக்கும் பவித்திரைக்கும் பிறந்தவர். பெற்றோரிட்ட பெயர் விசாரசருமர். அவ்வூரில் வாழ்ந்த அந்தணர்களின் பசுக் களை மேய்ந்த இடையன் பசுக்களைத் துன்புறுத்தியதைக் கண் டார். பசுக்கள்மீது இரக்கங்கொண்டு தாமே பசுக்களை மேய்க் கத் தொடங்கினார். பசுக்கள் செழித்து வளர்ந்து மடிநிறைந்து பாலைப் பொழிந்தன தானே இரங்கிப் பொழியும் பாலைக்குடங் களிற் சேர்த்து, மண்ணியாற்றங்கரையில், ஆத்திமரத்தடியில் மணலால் லிங்கம் அமைத்து பாலால் அபிஷேகஞ்செய்து வழி பட்டார். பாலெல்லாம் விரையமாவதையறிந்த தந்தையார் சினங்கொண்டு பாற்குடத்தைக் காலால் உதைத்தார். தந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் செயலை சிவ அபராதமென உணர்ந்த விசாரசருமர் கோபங் கொண்டு மழுவினூற் தந்தையின் காலை வெட்டினூர்.

தாதையைத் தாளறவீசிய சண்டிக்கு அண்டத்தொடு முடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோவிலும் போனகமும் அருளிச்
சோதி மணி, முடித்தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்திற்குப் பரிக வைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

என்று சேந்தனூரால் போற்றப்பட்டவர் சண்டேஸ்வரர்.

உலகைமறந்து சிவபூசையில் ஈடுபட்டிருந்த விசார சரும ருடைய சிவபக்திச் சிறப்பால் அவருக்குச் சிவபெருமான் சண்டேஸ்வரர் என்ற பதத்தை அருளினூர். பக்திவயப்பட்ட மனிதர்கள் தேவநிலைக்கு உயர்த்தப்படுவார்கள் என்பதற்குச் சண்டேஸ்வரர் எடுத்துக்காட்டு. சண்டேஸ்வரருக்கு ஆலயங்களில் தனிச் சந்நிதி உண்டு, ஆலயத்தின் உட்பிரகாரத்தில் வடக்கு வீதியில் கருவறையை நோக்கித் தியானத்தில் இருப்பார் சண்டேஸ்வரர்.

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புனிதற்கமைக்கும் பொருளன்றி
மின்னுங் கலனூடைகள் பிறவும் வேறு தனக்கென் றமையாமே
மன்னுந் தலைவன் பூசனையில் மல்கும் பயனை அடியார்கள்
துன்னும்படி பூசனை கொள்ளும் தூயோனடித் தாமரை தொழுவாம்.

## 23. ஆகாய லிங்கம்

### மலைப்பூசை நடைபெறுமிடம்

தெட்சண கயிலாயம் எனப்படுவது திருக்கோணமலை. இத் தலத்தின் தெய்வீகச் சிறப்புக்களை எடுத்துக் கூறுவன தெட்சண கயிலாய புராணம், திருக்கோணுசல புராணம், திருக்கரைசைப் புராணம், கோணேசர் கல்வெட்டு, திரிகோணமலை அந்தாதி, தேவாரம், திருப்புகழ் முதலிய பழைய நூல்கள். இவைகளுள் தெட்சணகயிலாய புராணத்தில் இங்கு மலைப்பூசை நடைபெற்று வருமிடத்தில் கயிலாயபதி எழுந்தருளியுள்ள சிறப்பும் அவருடைய திருக்கோவிலின் பெருமைகளும், கங்கை முதலான சகல புனித நதிகளும் மலையின் அடியில் கடலினுள் சங்கமமாகின்றன என்றும், இறைவன் ரெத்தின சிம்மாசனத்தில் எழுந்தருளியிருக்கின்றூர் என்பனவும் கூறப்பட்டிருக்கின்றது.

கயிலாயபதியானவர் உமையம்மை சமேதராக இமயமலையில் கயிலையங்கிரியில் இருக்கின்றூர் என்பது இந்துகளின் உறுதியான நம்பிக்கை, உத்தரகயிலையில் வாயுபகவானுக்கும் ஆதி சேடனுக்குமிடையில் நடைபெற்ற போரில் ஆதிசேடன் தனது ஆயிரம் பணுமுடிகளால் திருக்கயிலையங்கிரியை மூடிக்கொள்ள,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயுபகவான் தனது முழுப்பலத்தையும் பிரயோகித்துக் கயிலையங்கிரியில் மூன்று சிகரங்களைப் பிடுங்கி எறிந்தாராம் அவ்வாறு வீசப்பட்ட சிகரங்களில் ஒன்று ஸ்ரீகாளத்தி. மற்றது திருச்சிராய்மலை. மூன்றாவது திருக்கோணமலை. இவைமூன்றிலும் திருக்கோணமலையானது வடகயிலையின் அதிதெற்கே வீழ்ந்தபடியால் இது தென்கயிலை அல்லது தெட்சணகயிலை எனப் பெயர்பெற்றது இம்மலையில் உமையம்மை சமேதராகிய கயிலாசபதியானவர் மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமான் என்ற திருப் பெயரோடு வீற்றிருக்கின்றார்.

உத்தரகயிலையும், தெட்சணகயிலாயமாகிய திருக்கோணமலையும், காளத்தியும், திருச்சிராமலையும் லிங்கவடிவிலேயே அமைந்திருக்கின்றன. பஞ்சபூதத் தலங்களென்று சிறப்பித்துக் கூறப்படுவன சிதம்பரம் (ஆகாயலிங்கம்), காஞ்சி (பிருதிவிலிங்கம்), திருக்காளத்தி (வாயுலிங்கம்), திருவண்ணாமலை (தேயுலிங்கம்), திருவானைக்கா (அப்புலிங்கம்). இவற்றுள் சிதம்பரத்திலுள்ள ஆகாயலிங்கம்போல அமைந்துதிருப்பது கோணலிங்கம். இந்த லிங்கபூமியில் அமைந்துள்ள கோணலிங்கத்திற்கு (ஆகாயலிங்கம்) இம்மலையில் பூசை நடைபெற்று வருகின்றது.

பூசை நடைபெறுமிடத்தில் கல்லாலவிருட்சம் இருக்கின்றது. இந்த அற்புதமான விருட்சத்தினடியிலிருந்துதான் தெட்சணாமூர்த்தியானவர், திருக்கயிலாயத்தில் சனகர், சனந்தனர், சனாதனர் சனற்குமாரருக்கு வேதத்தை உபதேசித்தார். பூசை நடைபெறும் இடத்திற்கு எதிரே காணப்படும் குன்றில் கடல்மட்டத்திற்கு மேலே திரிகோணவடிவமான திருக்கதவம் காணப்படுகின்றது. உள்ளே ஆகாயலிங்கமாக மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமான் எழுந்தருளியிருப்பதாக ஐதீகம். இவ்விடத்தில் நடைபெறுவதுதான் மலைப்பூசை.

மூன்னூற்றறுபது வருடங்களுக்குமுன் கி. பி. 1624ஆம் ஆண்டு போத்துக்கீசர் கோணேசர் கோவிலை அழித்தபின்னர் மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமான் மலைப்பூசை நடைபெறுமிடத்திலுள்ள கல்லால விருட்சத்திலும். திருகோணமலைத் தேவாரத்திலும் எழுந்தருளியிருந்தனர். கோயில் அழிக்கப்பட்டபின் இந்த இடத்தில்தான் இயற்கை வழிபாடு நடைபெற்றுவந்தது புதிய ஆலயம் அமைக்கப்பட்ட பின்னரும் மலைக்குப் பூசை செய்தபின்னர்தான் ஏனைய மூர்த்திகளுக்குப் பூசை நடைபெற்று வருகின்றது. ஆகாயலிங்கம் அமைந்துள்ள இந்த இடம் மகாபவித்திரமானது.

நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும் நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிழவும் அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோணமா மலை அமர்ந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. ராஜகோபுரம்

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்று சொல்லப் பட்டிருக்கின்றது. ஆலய வழிபாட்டுக்குச் செல்லும் அடியவர்கள் முதலில் ராஜகோபுரத்தை மூலலிங்கத்தின் பிரதிபிம்பமெனக் கருத்திற்கொண்டு அதனை வழிபட்டபின்பே உட்பிரவேசிக்கவேண் டும் என்பது சிவாகம விதி. சிற்பசாஸ்திர முறைப்படி மனித னுடைய சரீரம் போல ஆலயம் அமைக்கப்படுகின்றது. அதன் படி ராஜகோபுரம் பாதங்களாகவும், கற்பக்கிரகம் சிரசாகவும், அம்பாள் சந்நிதி கண்டமாகவும், நடேசர் சந்நிதி இருதயஸ் தானமாகவும், பலிபீடம் வயிருகயும், ஸ்தம்பம் நாபியாகவும், ஸதர்ப விநாயகர் மூலாதாரமாகவும் அமையும்படியாக ஆலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

யோகசாஸ்த்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் மனித உட லிலுள்ள ஆறு ஆதாரங்களான, மூலாதாரம் - ஸ்தம்ப கணபதி யாகவும், சுவாதிட்டானம் - ஸ்தம்பமாகவும் மணிபூரகம் - நந்தி யாகவும், அனுகதம் - நடேசராகவும், விசுத்தி - அம்பாளாகவும், ஆக்ஞை - கற்பக்கிரக லிங்கமாகவும், கருவறை விமானம் - சகஸ் ராரமாகவும் ஆலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய ஆலயத்தினுள் இறைவனை வழிபட்டு இரண்டறக் கலத்தலாகிய யோக சாதனைக்காக உட்பிரவேசிக்கின்ருேமென்ற நினைப்போடு அமைதியாகச் செல்லவேண்டும், இதனை உணர்த்துவதற்காக கோபுர வாசலின் இருபக்கங்களிலும் துவாரபாலகர்கள் வைக்கப் பட்டிருக்கின்ருர்கள். உள்ளே பெருமான் இருக்கின்ருர் அமைதி யாகச் செல்லுங்கள் என்று ஒரு கையை உள்ளே காட்டி மறு கையினுல் நமக்கு எச்சரிக்கை தருவதைத் துவாரபாலகர்களில் காணலாம்.

ராஜகோபுரத்தின் மேற்பகுதியில் திருக்கோணேஸ்வரத்தின் வரலாறுகளை விளக்கும் உருவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் தலத்திற்குத் தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், திருப் புகழ் பாடிய அருணகிரிநாதர், கோவிற் திருப்பணி செய்த குளக் கோட்டு மன்னன், கயிலாய மலையைப் பிடுங்கி வீசிய வாயுபக வான், தெட்சணகயிலாயத்தை இகழ்ந்து கண்ணிழந்த கஜபாகு மன்னன், என்பவர் களுடைய உருவங்களும் சோமாஸ்கந்த மூர்த் தமும், அகத்தியர் முதலான முனிவர்கள் இங்கு ,தவம்செய்த வர லாறுகளும் ராஜகோபுரத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. பஞ் சகலசங்களைக் கொண்டதாக ராஜகோபுரம் அமைக்கப்பட்டிருக் கின்றது.

## 25. அம்பாள் கோபுரம்

இது மாதுமையம்பாள் சந்நிதிக்கு நேரே தெற்குவாசலில் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஐந்து கலசங்களைக் கொண்டதாக வும் ஐந்து துறைகளையுடையதாகவும் இது அமைந்திருக்கின்றது. ஒவ்வொரு துறைகளின் பக்கங்களிலும் துவாரபாலகிகள் வைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருக்கின்றனர். ஆலயத்தினுள்ளே அம்பாள் எழுந்தருளியி ருக்கின்ருள் அமைதியாக உட்பிரவேசிக்கும்படி நம்மை அவர்கள் எச்சரிக்கின்ருர்கள். ராஜகோபுரத்திற்குச் சொல்லப்பட்ட தத்துவ விளக்கங்களெல்லாம் இதற்கும் பொருந்தும். கோபுரத்தின் கிழக்கு, மேற்குப் பக்கங்களில்சக்திகளின் வடிவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அம்பாள் சந்நிதியின் வாசலில் நடுவில் மாதுமையம்பாளும், இரு பக்கங்களிலும் லெட்சுமி, சரஸ்வதி ஆகிய இருவருடைய உருவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

கால்களால் பயனென் — கறைக்
கண்டன் உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்
கால்களால் பயனென்.

## 26. விமானங்கள்

விமானங்களைத் தூபிகள் என்றும் சொல்வார்கள். ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே சந்நிதிகள் அமைக்கப்படும்போது அவைகளுக்கு விமானங்களும் அமைகின்றன. விமானங்களில்லாத கோயில்கள் மடாலயங்கள் எனப்படுகின்றன. திருக்கோணேஸ்வரத்தில், மூலவருக்கும், அப்பாள், நடேசர், பிள்ளையார், சுப்பிரமணியர், நவக்கிரகங்கள், சூரியன், சந்திரன், நாகதம் பிரான், வைரவர், சண்டேஸ்வரர், நால்வர், சேக்கிழார், திருமுறைக்கோயில் என்பனவற்றில் விமானங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். ஆலயத்தில் பூசைகள் முடிந்து நடை அடைக்கப்பட்டிருக்கும்போது ஒருவர் சென்று பார்த்தால், எந்தக் கோவிலில் என்ன மூர்த்தி உள்ளே பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றதென்பதை அவ்வக் கோவிலின் தூபியில் வாசல்பக்கமுள்ள பிரதான திருவுருவத்தைக் கொண்டு அறிந்துகொள்ளலாம்.

## கருவறை விமானம்

விமானத்தின் கிழக்கே சிவமூர்த்தங்களும், தெற்கே யோக தட்சணுமூர்த்தி, வீணுதெட்சணுமூர்த்தியும், மேற்கே விஷ்ணு மூர்த்தமாகிய அனந்தசயனமும், வடக்கே பிரம்ம மூர்த்திகளும் காணப்படுகின்றன விமானத்தின் அடிப்பாகத்தில் அர்த்தமண்டபத்திற்கு மேல், தெற்குப்பக்கம் இராவணன் கயிலைமலையெடுத்த வரலாற்றை விளக்கும் உருவம் காணப்படுகின்றது. "எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால் ஏத்திட ஆத்மாம் பேறு கொடுத்தவர்" என்று கூறுகின்றது திருக்கோணுசலத் தேவாரம். "இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல் தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்" என்று தேவாரம் கூறுகின்றது. இலங்கை மன்னனுகிய இராவணன் சிவலிங்கத்தைப் பெறுவதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகப் பன்னெடுங்காலமாகத் தவம் செய்தானும். இறைவன் அருள் செய்யாததால்சினங்கொண்டு மலையை வெட்டிப்பிளந்து லிங்கத்தைத் தூக்க முயன்றனும். சிவபெருமான் தனது கால் விரலால் மலையை ஊன்றி இராவணனுடைய அகந்தையை அடக்கினராம். இராவணன் வருந்தி இரங்கிச் சாமகானம்பாடி வேண்டிக்கொண்டபோது நாளும், வாளும் கொடுத்தார் இறைவன் என்று தெட்சணகயிலாய புராணம் கூறுகின்றது இராவணன் மலையை வெட்டிப் பிளந்த இடம் இராவணன்வெட்டு எனப்படுகின்றது.

அர்த்தமண்டபத்தின் வடக்குப்பக்கத்தில் மார்க்கண்டேயர் சிவபூசைசெய்ததும், இயமன் மார்க்கண்டேயரைக் காலபாசத்தால் கட்டமுயன்றபோது சிவபெருமான் லிங்கத்திலிருந்து தோன்றி யமனை உதைத்து மார்க்கண்டேயருக்கு அருளிய வரலாறு காட்டப்பட்டிருக்கின்றது.

"பரிந்துநன் மனத்தால் வழிபடுமாணி தன்னுயிர்மேல் வரும்
கூற்றைத் திரிந்திடாவண்ணம் உதைத்தவர்க்கருளும் செம்மையார்"

என்று திருக்கோணமலைத் தேவாரத்தில் கூறப்பட்ட வரலாறு இங்கே காணப்படுகின்றது.

## அம்பாள் விமானம்

அம்பாள் விமானத்தின் கிழக்கே புவனேஸ்வரியும், மேற்கே நாராயணியும், வடக்கே பிராம்மியும், தெற்கே மாதுமையம்பாளும் அமைக்கப்பட்டிருக்கின்றது. நடேசர் தூபியில் நடராஜருடைய ஆடல்காட்சியும், தேவசபையில் சோமாஸ்கந்தர், பிள்ளையார், சுப்பிரமணியரும் காணப்படுகின்றன. இவ்வாறே ஏனையவற்றிலும் காணலாம்.

## 27 இராவணன் வெட்டு

இலங்கை மன்னன் என்று சிறப்பிக்கப்பட்டவனும், சிவபக்தனுமாகிய இராவணன் வழிபாடு செய்துவந்த கோணேஸ்வரத்தில் பக்தி வைராக்கியத்தின் சின்னமாகவிளங்குவது இராவணன் வெட்டு. இராவணனின், சிவபக்திக்கும், தவ வலிமைக்கும், வீரத்திற்கும் எடுத்துக்காட்டாயுள்ள அழியாத முத்திரை அது. கடல் மட்டத்திலிருந்து 400 அடி உயரமான குன்றில் கோணேசர் கோயிலுக்கருகே, கிழக்குப் பக்கமாக இந்த இராவணன் வெட்டுக் காணப்படுகின்றது.

தனது தாயார் வழிபாடு செய்வதற்காக உத்தர கயிலைக்குச் சென்று தவஞ்செய்து பெற்றெடுத்த லிங்கத்தை இழந்துவிட்ட இராவணன், நாரதரின் அறிவுரையின்படி தெட்சணகயிலாயமாகிய திருக்கோணேஸ்வரத்திற்கு வந்து மீண்டும் ஒரு லிங்கத்தைப் பெறுவதற்காகக் கடுந்தவம் புரிந்தான். இறைவன் தவத்திற்கு இரங்காமை கண்டு பக்திவைராக்கியத்தினால் அகங்காரங்கொண்டு கோணேசர் அமர்ந்துள்ள குன்றையே வெட்டிப் பிளந்து எடுத்துச்செல்ல முனைந்தான் அதற்காக அவன் வெட்டிய அடையாளந்தான் இராவணன் வெட்டு. இந்த வரலாற்றைத் தெட்சணகயிலாயபுராணம் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு கொடுத்தவர்"

கோணேசப்பெருமான் என்று மேலே கூறிய வரலாற்றைத் திரு. ஞானசம்பந்தமூர்த்தி நாயனர் திருக்கோணேஸ்வரத்தலத் தேவாரத்தில் கூறுகின்ருர்.

" வண்டமரோதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்தபின்னவர்க்கு
அண்டமளிப்பன அஞ்செழுத்துமே."

என்று சீர்காளிபெற்ற ஞானக்குழந்தையாகிய ஞானசம்பந்தர் இராவணனுடைய சிவபக்தியை விதந்து பேசுகின்ருர் தேவாரத்தில். வண்டமரோதி என்பது உமையம்மையார். இதனை இராவணன் தேவி மண்டோதரி என்றும் கூறுவர். பஞ்சாட்சரத்தை ஓதிச் சாமகானம் பாடிய இராவணனுக்கு இரங்கிய இறைவன் நாளும், வாளும் கொடுத்தாரென்று தேவாரமும், தெட்சணகயிலாய புராணமும் கூறுகின்றது. இத்தகைய சிவபக்திச் செம்மலாகிய இராவணன் வைத்த அழியாத அடையாளந்தான் இராவணன் வெட்டு. இது இன்று இந்துசமயத்தவர்களின் வரலாற்றுச் சின்னமாகவும், சுற்றுலாப் பயணிகளின் அற்புதச் சின்னமாகவும். விளங்குகின்றது.

## 28 ஆதிலிங்கம்

திருக்கோணேஸ்வரத்தில் ஆதிகாலத்திருந்த கோணேசர் கோவில் கடல் கோளினுல் அழிக்கப்பட்டு சமுத்திரத்தில் அமிழ்ந்திக் கிடக்கின்றது. இந்த அழிபாடுகளைச் சமுத்திரத்தினடியில் ஆய்வு செய்த திரு மைக்வில்சன், சேர். ஆதர்கிளாக், றொட்னி ஜொங்கிளாஸ் என்பவர்கள் 1956ஆம் ஆண்டு கோணேசர் மலைக்கருகே ஆழ்கடலில் ஆய்வுசெய்து இந்த ஆதிலிங்கத்தைக் கடலிலிருந்து வெளிக்கொணர்ந்தார்கள். லிங்கத்தின் வரலாறுகளை ஆராய ஆவல்கொண்ட மைக்வில்சன் அவர்கள் பல நூல்நிலையங்களிலும் சிவலிங்கத்தின் தத்துவங்களை ஆராய்ந்தறிந்தார் அவருடைய ஆராய்ச்சியின் பயனுகப் பலவகைப்பட்ட லிங்கங்களுக்கு விளக்கங்கள் கிடைத்தன.

ஆதிகாலத்தில் அமைக்கப்பட்ட லிங்கத்திற்கு ஆவுடையார் என்ற வட்டமானபாகம் இருக்கவில்லை. அதற்குப் பதிலாக லிங்கத்தின் பிரம்மபாகம், விஷ்ணுபாகங்களைக் கற்தூண் வடிவில் அமைக்கும் வழக்கம் இருந்ததாயும், இதனையும், ருத்திரபாகமாகிய லிங்கத்தையும் செப்புத் தகட்டினுல் ஒன்ருக இணைத்து சிவலிங்க வழிபாடு நடைபெற்றுவந்ததாக மைக்வில்சன் அவர்கள் கூறினுர்கள். சங்க இலக்கியங்களில் கந்தழிவழிபாடு என்று குறிப்பிடுவதும் இந்த ஆதிலிங்க அமைப்பை ஒத்ததாகுமென்று அவர் 1982ஆம் ஆண்டு என்னிடம் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த லிங்கம் மிக அற்புதமான தெய்வீக சக்திவாய்ந்த தென்பது அவருடைய கருத்து. இதனை எப்படி அமைக்கவேண்டு மென்பதற்கு மாதிரி வடிவம் ஒன்றையும் கொண்டுவந்து காட்டினார் இந்த லிங்கத்தின் ருத்திரபாகத்தைக் கார்த்திகைத் தீப மேற்றும் மலையுச்சியில் வைத்திருந்தார்கள். பலவருடங்களுக்கு முன் இத்தலத்திற்கு வந்த வடநாட்டுத் துறவியொருவர் மூன்று நாட்களாகத் தியானத்தில் அமர்ந்திருந்தார். அவர் லிங்கத்தின் மகத்துவத்தை மானசீகமாக உணர்ந்து இதனைக் கீழே இறக்கிப் பாதுகாப்பாக வைக்கும்படி கூறினார். இதனால் மலையுச்சியிலிருந்த சிவலிங்கத்தின் ருத்திரபாகத்தை கீழே கொண்டுவந்து அதனையும், பிரம்மபாகம், விஷ்ணுபாகங்களையும் செப்புத் தகட்டால் இணைத்து ஆலயத்திற்கு வெளியே இராவணன் வெட்டுக்கருகில் சிறிய கோயிலமைத்து அதில் வைக்கப்பட்டிருக்கின்றது. லெட்சுமி-நாராயணரும் இங்கேயே வைக்கப்பட்டிருக்கின்றனர். ஊனப் பட்டிருப்பதால் இவைகளுக்குப் பூஜை நடைபெறுவதில்லை. ஆதியாகிய கோணேஸ்வரத்தின் காலத்தைக் கணிக்கும் அழியாத சின்னமாக இவைகள் இருக்கின்றன.

## இலெட்சுமி நாராயணர்.

திருக்கோணேஸ்வரத்தில் குளக்கோட்டு மன்னன் திருப்பணிகள் செய்த வரலாறுகளுக்குச் சான்றுபகர்வது கோணேசர் கல்வெட்டு. அந்த மன்னன் திருக்கோணமலையிலிருந்த, ஆலயங்களின் திருப்பணிகளை நிறைவேற்றிச் சிறப்பாக நடாத்துவதற்கு வகுத்த திட்டங்களைக் கூறுகின்றது கோணேசர் கல்வெட்டு.

கி. பி. 1624ஆம் ஆண்டு போத்துக்கீசத் தளபதியாகிய கொன்ஸ்டன்டைன் டீசா இவ்வாலயங்களை அழித்தபோது இம் மலையில் மூன்று ஆலயங்கள் இருந்ததென்றும், ஒன்று மலையடிவாரத்திலும், மற்றது மலையுச்சிலும். மூன்றாவது மலையின் நடுப் பகுதியிலும் இருந்ததாக போத்துக்கல் மன்னனுக்கு டீசா அனுப்பி வைத்த அறிக்கை கூறுகின்றது. இந்த மூன்றாவது கோவில் அழிக்கப்பட்டபோது அங்கிருந்த மகாலெட்சுமியும், நாராயணரும் மண்ணில் புதைந்து மறைந்து கிடந்தார்கள்.

பிரித்தானியர் இந்த நாட்டை ஆண்டுவரும் காலத்தில் மண்மூடி மறைந்துபோன மூன்றாவது ஆலயமிருந்த பகுதியில் நீர்த் தாங்கியொன்றை நிலத்தினடியில் அமைத்தார்கள். அதற்காக நிலத்தை அகழ்ந்து செல்லும்போது இந்த லெட்சுமி நாராயணரின் சிலவிக்கிரகங்கள் கிடைக்கப்பெற்றன. ஆயுதப் பிரயோகத்தினால் இந்தத் திருவுருவங்கள் சிதைந்துவிட்டன. இவை கோணேஸ்வரத்தின் தொல்பொருள்களாதலால் சிதைந்துபோன திருவுருவங்களைப் பொருத்தி இங்கே வைக்கப்பட்டிருக்கின்றது. அழகிய இத்திருவுருவங்கள் போத்துக்கீசரின் அக்கிரமங்களின் அடையாளச் சின்னமாக விளங்குகின்றன. இவைகள் ஊனப் பட்டிருப்பதால் இதற்குப் பூசைகள் நடைபெறுவதில்லை.

சிவஸ்தலங்களில் நாராயண மூர்த்தியையும் பிரதிஷ்டை செய்வதற்கு ஆகம சாஸ்திரங்களில் சம்மதமுண்டு. இந்தியாவில் பல சிவஸ்தலங்களிலும் நாராயணப் பிரதிஷ்டை செய்யப்பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிக்கோவில்கள் இருக்கின்றன. இத்தலத்திலும் அவ்வாறு அமைந்திருந்தது. இந்த லெட்சுமி நாராயணருடைய அளவைக் கொண்டு அக்காலத்திலிருந்த ஆலயத்தின் அளவையும் சிறப்பையும் ஊகித்தறியலாம். கோணேஸ்வரத்தின் அழியாத சின்னமாக இவைகள் விளங்குகின்றன.

## பாவநாசத் தீர்த்தம்

சிறைச்சாலைக்குள்ளே சிலர் வாழ்கின்றார்கள். தாம் செய்த சிலபல குற்றங்களுக்குத் தண்டனை அனுபவித்தபின், வெளியே வந்து சுதந்திரமாக வாழ்வார்கள். இந்துமத சித்தாந்தம் இந்த உலகத்தை மாயச் சிறைச்சாலையாக்கி இதில் வாழும் ஜீவர்களைப் பாசக் கைதிகளாகக் காட்டி ஆத்மீக விடுதலைக்கு விளக்கந் தருகின்றது. மலபரிபாகமேற்பட்டுச் சத்தினிபாதமடைதலை நமது சைவசமய சித்தாந்திகள் ஆத்மீக சுதந்திரமென்று விளக்குகின்றார்கள்.

சாமானிய மக்கள் இவைகளைப் புரிந்துகொள்வது சிரமசாத்தியமென உணர்ந்த சான்றோர்கள், இந்துமத தத்துவங்களை மக்களின் வாழ்க்கைநெறியோடு இணைத்து அமைத்துத் தந்துள்ளார்கள். ஆலய வழிபாடும், தீர்த்தாடணமும் அவற்றிலொரு வாழ்க்கைநெறி. இறைவன் தாயினும் நல்ல தலைவனாயிருந்து நம்மை ஆண்டு அருள்புரிகின்றான் என்ற நம்பிக்கை இந்துசமயத்தவர்களுடைய வாழ்க்கை நெறியில் ஊறிப்போயிருக்கின்றது என்பதைச் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தில் கோடிட்டுக் காட்டுகின்றார்.

அண்ணலே எனை ஆண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி வேதநாயகனே
கண்ணினால் திருக்கயிலையிலிருந்த நின் கோலம்
நண்ணி நான் தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்

கயிலாயத்துச்சியுள்ளானைப் பணிந்து ஆத்மீக விடுதலைக்கு வழிகாட்டும் சேக்கிழார் ஆலய வழிபாட்டுக்கு நம்மை அழைத்துக் குறிகாட்டுகின்றார். கோணேசர் கோவிலுக்குரிய தீர்த்தம் பாவநாச தீர்த்தம். தெட்சணகயிலாயமாகிய திருக்கோணேஸ்வரத்தில் கோணேசப்பெருமானுக்குப் பாவநாசச்சுனையில் தீர்த்தோற்சவம் நடைபெற்று வருகின்றது. திருக்கோணேஸ்வரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானுடைய திருக்கோலக் காட்சியை,

செய்யமலர்த் தாளழகும் தாழ்ந்திற் சிலம்பழகும் சிறுமானேந்தும்
கையழகும் மழுவழகும் திருமார்பின் நூலழகும் கருணைப் பார்வைத்
துய்யமுக மலரழகும் புன்முறுவல் நகையழகும் துலங்கித் தோன்றும்
ஐயனுபர் கைலைமலை முதல்வனையெம் இதயமலரழுத்துகிற்பாம்

என்று தெட்சணகயிலாய புராணம் கூறுகின்றது. திருஞானசம்பந்தரால் தேவாரத் திருப்பதிகம் பாடப்பெற்ற சிவஸ்தலமிது. அருணகிரிநாத சுவாமிகள் "நினைத்தகாரியம் அனுக்கூலமே தரும் பெருமாள்" என்று போற்றி இறைவனை வழிபட்ட தலமிது. ஈழத்தின் கிழக்கே ஆழிக்கரையிலமைந்த அற்புதத் தலமிது. குளக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டு மன்னனால் திருப்பணிகள் செய்யப்பெற்ற புனிதத் தல மிது. குளகோட்டுமன்னன் செய்த திருப்பணிகளைக் கவிராஜ பண்டிதர் பாடிய கோணேசர் கல்வெட்டுச் சாசனம் பின்வரு மாறு நமக்கு உணர்த்துகின்றது.

திருந்து திரிகயிலை வெற்பில் சிவாலயமும் கோபுரமும் சிறக்கநாட்டி
பரிந்துலகோர் பவமறுக்கும் பாவநாசச் சுனையும் பரிவாய்ச் செய்து
தெரிந்தபுகழ்த் திருக்குளமும் வயல்வெளியுந் திருத்தியரற்கென வீந்து
பரிந்தவரன் தொழும்புசெய ஆள்வேண்டும் எனநடந்தான் பரிதிவேந்தன்

சூரியகுல வம்சத்தவனாகிய குளக்கோட்டு மன்னனால் திருப்பணி கள் செய்யப்பெற்ற பாபநாசத் தீர்த்தத்திலேயே இன்றும் தீர்த் தோற்சவம் நடைபெற்று வருகின்றது.

பாவநாசச்சுனையானது நீண்ட படித்துறைகளையுடைய கேணியாகவும், அதனருகே சுவாமிக்கு அபிஷேகம் செய்வதற்கு மாத்திரம் தீர்த்தமெடுக்கும் தீர்த்தக் கிணற்றையுமுடையதாக இருந்தது. போத்துக்கீசர் பாவநாசச் சுனையை அழித்துப் படித் துறைக் கற்களையெடுத்துக் கோட்டை கட்டினார்கள். சுனை தூர்ந்து மறைந்துவிட்டது. தீர்த்தக் கிணறுமாத்திரம் தெய்வாதீனமாக எஞ்சியிருந்தது. இதனால் சுவாமிக்கு தீர்த்த மெடுக்கும் தீர்த்தக் கிணற்றிலேயே தற்போது தீர்த்தோற்சவம் நடைபெற்று வருகின் றது. ஆழமான இந்தப் பெருங்கிணற்றிலிருந்து நீரிறைக்கும் இயந்திரத்தின்மூலம் தீர்த்தத்தை வெளிக்கொணர்ந்து மழை போல் பொழியச் செய்வார்கள். சுவாமி தீர்த்தமாடியபின் தீர்த்தமழையில் மக்கள் தீர்த்தமாடும் வழக்கம் நிகழ்ந்து வருகின் றது. இத்தகைய தீர்த்தோற்சவத்தை வேறெங்குமே காணமுடி யாது. இந்தப் பாவநாசத் தீர்த்தம் தற்போதிருக்கும் கோணேசர் கோவிலிலிருந்து சுமார் 500 யார் தூரத்தில் மலையடிவாரத்தில் இருக்கின்றது.

கோணேசர் கோவிலில் பங்குனி உத்தரத்தில் கோணேசப் பெருமானுக்குக் கொடியேறி பதினெட்டு நாளுக்கு மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. "நன்னயபுய்க்கும் பாவநாசத் தீர்த் தத்தினோர்பால் மன்னிய மணியின் பொற்பார் மஞ்சனச் சோலை தன்னில்" என்று திருக்கோணசலபுராணத்திற் கூறப்பட்டிருப்பதற் கமைய மகோற்சவத்தின் முடிவில் இந்தப் பாவநாசத் தீர்த்தத் தில் கோணேசப்பெருமான் தீர்த்தமாடுகின்றார். சர்வான்மாக்க ளுடைய இருவினைப் பயன்களையும் பாவநாச தீர்த்தத்தால் விலக்கி அண்ணல் எம்மை ஆண்டருளுகின்றார்.

வஞ்சிபிடி யன்னநடை மாதுடனெங் கோமாற்கு வழுவுறுது
பஞ்சகவ்வியம் புதிய மாக்காப்புக் குங்குமப்பூப் பனிதஞ்சந்தோடு
எஞ்சலில் கோரோசனை மற்றேனையவும் பனிநீரிலிட்டளாவி
மஞ்சனத்தின் திரவியங்கள் முறைகூட்டி யபிடேக முறையிற் செய்மின்.

என்று திருக்கோணசல புராணத்திற் கூறப்பட்டுள்ள பிர காரம் மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து பாவநாசத் தீர்த்தத்தால் திருமுழுக்காட்டப் பட்டு வருகின்றது. இந்தப் புனிதமான பாவநாச தீர்த்தத்தில் நீராடும் சர்வான்மாக்களுடைய பாவங்களையெல்லாம் கோணேசப் பெருமான் நாசஞ்செய்து ஜீவன்முத்தியளித்துவருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இத்தகு கடவுட்சாறு நோக்கியங் கிறைஞ்சுவோரும்
அத்தகு விழவினீற்றில் தீர்த்தநீர் ஆடுவோரும்
வித்தகன் கயிலை நண்ணி விறற் கண நாதராவார்.''

என்று காஞ்சிப்புராணம் கூறுகின்றது. மக்களுடைய வாழ்க்கைநெறியோடு இணைக்கப்பட்டுள்ள திருவிழா. தீர்த்தவிழா என்பன மனித உள்ளத்தைப் பண்படுத்திச் சீரும், திருவும் பொலி யச்செய்து உலகமாகிய மாயச் சிறையிலிருந்து விடுவித்து இறை வனுடைய திருவடிகளில் சேர்தலாகிய ஆத்ம சுதந்திரத்தை அளிக்கின்றன.

உ
சிவமயம்

## திருக்கோணேஸ்வரப் பதிகம்

திருஞான சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம். பண் - புறநீர்மை.

1. நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பும் நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும் அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோதம் நித்திலங் கொளிக்குங் கோணமாமலை அமர்ந்தாரே.

2. கடிதென வந்த கரிதனை யுரித்து அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து கொள்ளமு நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங் கோணமாமலை யமர்ந்தாரே

3. பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம் படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகைபாகமாக முன்கலந்தவர் மதில்மேல்
தனித்த பேருருவ விழித்தழ நாகம் தாங்கிய மேரு வெஞ்சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே.

4. பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப் பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன்தேவி வேண்டமுன் கொடுத்த விமலனார் கமலமார் பாதர்
தெளித்துமுன் னரற்றும் செழுங்கடற் றரளம் செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்கும் கோணமாமலை
அமர்ந்தாரே.

5. தாயினும் நல்ல தலைவரென் றடியார் தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா மாண்பினர் காண் பலவேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே.

6. பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவர்க் கருளுஞ் செம்மையார் நம்மையாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை வண்செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ் கோணமாமலை அமர்ந்தாரே.

7. ஏழாவது திருப்பாடல் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலா லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு மிறப்பறியாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர் கோணமாமலை அமர்ந்தாரே.

9. அருவரா தொருகை வெண்டலை யேந்தி அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப் பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவருமறியா வண்ணமொள் ளெரியாய் உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்குங்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக் கோணமாமலை அமர்ந்தாரே.

10. நின்றுணுஞ் சமணுமிருந்துணுந் தேரும் நெறியலாதன புறங் கூற
வென்று நஞ்சுண்ணும் பரிசினர் ஒருபால் மெல்லியலொடு முடனாகித்
துன்றுமொண் பௌவ மௌவலுஞ் சூழ்ந்து தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவும் கோணமாமலை யமர்ந்தாரே

11. குற்றமில்லாதார் குரைகடல் சூழ்ந்த கோணமாமலை யமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான் கருத்துடை ஞானசம்பந்தன்
உற்ற செந்தமிழார் மாலையீரைந்தும் உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமுமாகித் தொல்வினையடையார் தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கோணமலைத் திருப்புகழ்

அருணகிரிநாதர் அருளியது

விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த ஆடையு மணிப்பூணு மாகவே
மினுக்கு மாதர்க ளிடைக்காம மூழ்கியே மயலூறி

மிகுந்த காமிய னெனப் பாருளோ ரெதிர்
நகைக்கவே யுடலெடுத்தே வியாகுல
வெறுப்ப தாகியே உழைத்தே விடாய்படு கொடியேனைக்

கலக்கமாகவே மலக்கூடி லேமிகு
பிணிக்கு ளாகியே தவிக்காமலேயுனை
கவிக்குளாய் சொலிக் கடைத்தேறவே செயும் ஒரு வாழ்வே

கதிக்கு நாயக உனைத்தேடியே புகழ்
உரைக்கு நாயெனை அருட்பார்வை யாகவே
கழற்கு ழாகவே சிறப்பான தாயருள் தரவேணும்

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்குமாரனெ முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை யாள்மகிழ் தருவேளே

வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுனி இடைக்காடர் கீரனும்
வகுத்த பாவுறு பொருட்கோல மாய்வரு முருகோனே

நிலைக்த நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொணா மலைத் தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே

நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவே
எடுத்த வேல்கொடு பொடித்தூள தாயெறி
நினைத்த காரிய மனுக்கூலமே புரி பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவ சிவ

# திருமுறைச் செல்வம்

"செல்வ நெடுமாடஞ் சென்று சேணோக்கிச்
செல்வ மதிதோயச் செல்வமுயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
செல்வம் கழலேத்துஞ் செல்வம் செல்வமே"

(ஞானசம்பந்தர்)

தில்லைக்கூத்தனைத் தித்திக்கும் செந்தமிழால் திருஞானசம் சம்பந்தர் துதிக்கும் தேவாரமிது.

"அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்
பொருட்செல்வம் பூரியார் கண்ணு முள"

என்று கூறுகின்றார் தமிழ்மறை தந்த திருவள்ளுவர். சான்றோர்களாயிருக்கப்பட்ட அனைவருக்கும் உடன்பாடான நிலையான செல்வம் ஆத்மீகச் செல்வமாகிய அருட்செல்வமே. ஏனைய செல்வங்கள் நிலையற்றன என்பதாகும். அழிவற்ற ஆத்மா அனுபவிக்கும் ஆத்மபோதத் தெளிவாகிய ஞானப்பிணைப்பால் இறைவனோடு இயையும் பொழுது அருட் செல்வம் சுரக்கின்றது.

பொருட்செல்வத்தைத் திரட்டுவதற்கு பொறிகள் புலன்கள் கரணங்களோடு கூடிய இந்தத் தேகத்தை இறைவன் நமக்கு அருளியுள்ளான். அறநெறி நின்று பொருட்செல்வத்தைத் தேடுங்கள். போகங்களை அனுபவியுங்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. அதே பொறிகள், புலன்கள், கரணங்களோடு கூடிய தேகத்துள் ஜீவித்திருக்கும் ஆத்மா அருள் நெறியிற் சென்று இறைவனோடு யோகித்து அருட்செல்வத்தை அனுபவிக்க ஆசைப்படுகின்றது. பகுத்தறிவு படைத்த எல்லா மனிதர்களுடைய அடியுள்ளத்திலும் இந்த உணர்வு துளிர்விட்டு நிற்கின்றது. இந்த உணர்வுக்கு ஊட்டமளித்து வளர்க்க நமது இந்து மதத்தில் பல மார்க்கங்களை அருளாளர்கள் காட்டியுள்ளார்கள். கர்மம், பக்தி, ஞானம், யோகம் என்பன அந்த மார்க்கங்கள் ஆலய வழிபாட்டின் மூலம் இந்த நான்கு மார்க்கங்கள் வாயிலாக அருட் செல்வத்தை அனுபவித்தவர்கள் அருளாளர்கள், நாயன்மார்களும், ஆழ்வார்களும் இத்தகைய அருளாளர்களே அவர்கள் அருளிச் செய்த தேவார, திருவாசகம் முதலியனவும் திவ்யப் பிரபந்தங்களும் திருமுறைகள் எனப்படுகின்றன. இவை அருட் செல்வத்தை அனுபவிக்கும் காரணிகளாக அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வஜீவதயாபரனும், பரமகருணாநிதியும், பரமபதியுமாகிய சிவபெருமானுடைய திருவருளைப் பெற்ற திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார்களால் திருவாய்மலர்ந்தருளப் பெற்றனவும், வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத்திறனைத் தெளிவிப்பனவுமாகிய தேவாரங்கள் முதலாகப் பெரிய புராண மீறாகவுள்ள திருப்பாடல்களே பன்னிரு திருமுறைகள் எனப்படுகின்றன. இறைவனும் அவன் எழுந்தருளியுள்ள திருமுறைப் பாடல்களும் பரமேஸ்வரனும் பராசக்தியும் போல அத்வைதமாய் விளங்குவன, இத் திருமுறைகளை ஓதுவோருக்கு நோய் நீக்கம், செல்வப் பெருக்கம், நல்வாழ்வு, பக்தி, ஞானம் முதலியவற்றை அளிப்பன. மேலும் சைவத்தின் உயர்வையும். விபூதி, உருத்திராக்கம், ஸ்ரீபஞ்சாட்சரங்களின் மகிமையையும் தெளிவுற விளக்குவன.

''மண்ணில் நல்வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை''

இறைவழிப்பாட்டின் மூலம் மண்ணில் நல்லவண்ணம் குறைவொன்றுமின்றி வாழலாமென்று கூறுகின்ற திருஞான சம்பந்தர் முதலிய அருளாளர்களின் அமுதவாசகங்களாகிய திருமுறைகளைப் பொருளுணர்ந்து ஓதும் போது உள்ளுணர்வில் தெய்வீகக்கசிவு ஏற்படுகின்றது. மனஒருமைப்பாடுடன் ஓதுபவர்களுடைய உள்ளம் கனிகின்றது. சிவாலயங்கள் தோறும் சென்று நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் பொன்னார் பசடைப் புண்ணியனை நினைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து நாயன் மார்கள் பாடினார்கள். ஆலயங்களில் மலர்ந்த திருமுறைகளை சிவாகமங்களும் ஏற்றுப் போற்றி வருகின்றன.

ஆகமசாஸ்திர முறைப்படி ஆலயங்களில் பூஜைகள், அர்ச்சனைகள் என்பன வடமொழி மந்திரங்களாலும், சுலோகங்களாலும் நடைபெற்று வருவதை அறிவீர்கள். தேவாரம் வேதசாரம் எனப்படுவதால் அது தமிழ்வேதம் எனப் போற்றப் படுகின்றது. அதனால் ஆலயங்களில் வேதமோதுவதுடன் தேவாரம் ஓதுவதும் ஆகமச் சிறப்பம்சமாயமைந்திருக்கின்றது சைவாலயப் பூஜைகளின் பொது அம்சங்களாவன; அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம் தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், தௌர்யந்திரிகம் (நிருத்த. கீத. வாத்தியம்) என்பன, பூஜையின் முழுமையைப் பேணுவதில் இந்த ஏழு அம்சங்களும் ஒரே மாதிரியான முக்கியத்துவமுடையன. இவற்றில் தோத்திரம் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சத்தில் பதிவாக்கு என்ற மகிமைக்குரிய தோத்திரங்கள் யாவும் இடம் பெறவேண்டியவை. இவ்வகையில் வேதம், ஆகமம், சைவத்திருமுறைகள் என்ற மூன்றும் பிரதானமானவை.

''பக்த ஸ்தோத்திரம் படேத் பச்சாத்
ஆசிஷம் சம்யக் ஆசரெத்''
உத்தரகாரணுகமம் — மகாபிஷேகவிதிப்படலம்
சுலோகம் – 85.

வேதம் ஓதியபின் திருமுறைகளைப் படிக்க, பின்னர் ஆசீர் வாதத்தை நன்முறையில் செய்க. என்று கூறப்பட்டுள்ளது.

''காமிகாகமம் - சிவானுக்ஞர்படலம் - சுலோகம் 329 - 331 இல்''

உரிய முறைப்படி நியோஜித்துவிட்டு வேதாத்யயனம் செய்க. வேதாகமங்களையும் சிவபுராணம், ஸ்தலமான்மியம் என்பனவற்றிலுள்ள தோத்திரங்களையும் செய்க. விசேடமாகப் பண்ணிசையுடன் தமிழ் வேதத் துதியைச் செய்க. அதன் பின் கீதம் நிருத்தம் என்பன செய்து ஆசீர்வாதம் செய்க என்று கூறப்பட்டுள்ளது.

''அகோர சிவச்சாரியார் பத்ததி - 25வது ஆசீர்வாத விதி''

வேதமோதல், தமிழ் வேதபாராயணம், நிருத்த, கீத, வாத்தியம், வலம் வருதல், நமஸ்கரித்தல், ஆசீர்வாதம் செய்தல், ஜபநிவேதனம் பண்ணல் என்ற உபசாரமிறுதியாகவுள்ள உபசார பரம்பரையின் சித்தியானது ஆகட்டுமென்று மகான்களாயுள்ள வர்கள் அனுகிரகிப்பார்களாக எனக் கூறப்பட்டுள்ளது.

பக்தஸ்தோத்திரம் - திராவிடஸ்தோத்திரம் - தமிழ்வேத மென்பன திருமுறைகளைக் குறிக்கும் ஆகமவசனங்களாகும். எனவே ஆகமங்களை அனுசரித்து ஆலயங்களில் நித்திய, நைமித்தியக் கருமங்களை நடத்தி வருவது சைவசமய மலர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பெரிதும் பயன்படுவதாயமையும்,

சைவ சாஸ்திரங்களில் மந்திரங்கள் பதினொன்று என்று கூறப்படுகின்றது. இதற்குமேல் மந்திரமேயில்லை, ஓம் ஈசானுய நம, ஓம் தத்புருஷாய நம, ஓம் அகோராய நம, ஓம் வாமதே வாய நம, ஓம் சத்யோ ஜதாய நம, இவை ஐந்தும் பஞ்சம் பிரம்ம மந்திரம்.

ஓம் ஹிருதயாய நம, ஓம் சிரசே நம, ஓம் சிகாயை நம, ஓம் ஹவசாய நம, ஓம் நேதரோப்யோ நம, ஓம் அஸ்த்ராய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம, இவை ஆறும் ஷடங்க மந்திரம் இந்த ஐந்தும் ஆறும் சேர்ந்து பதினொன்றும் சம்மிதாமந்திரம் எனப்படும். சம்மிதா-மந்திரங்களைப் போல திருமுறைகளும் பதினொன்ருக அமைந்திருக்கின்றன. சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தைப் பாடுவதற்கு முன்னர், திருமுறைகள் பதினொன்ருகவேயிருந்தன.

"ஏழு கோடி மந்திரங்களும் உன் சடாட்சரத்துள்ளடக்கம்" என்று முருகனைத்துதிக்கும் பாடலொன்றில் வருகின்றது. மந்திரங்கள் ஏழு கோடி என்ருல் நூறு லட்சம் சேர்ந்த கோடி என்பது பொருளன்று. கோடி என்பதற்கு அந்தம், நுனி என்று பொருள். நம, ஸ்வதா, ஸ்வாஹா, வஷட், வௌஷட், பட், ஹும்பட் என்ற இந்த ஏழும் கோடி என்பதை உணர்த்துவன. தேவார முதலிகள் மூவரும் பாடிய ஏழு திருமுறைகளும் ஏழு கோடி மந்திரங்கள் போல் தெய்வீகமாயமைந்து விட்டன. ஏழு கோடி மந்திரங்களுடன் கூடிய பதினொரு சம்மிதா மந்திரங்கள் போலப் பதினொரு திருமுறைகள் அமைந்ததும் தெய்வீகமே. சேக்கிழார் சுவாமிகள் பன்னிரண்டாம் நூற்ருண்டில் பெரிய புராணத்தைப் பாடிய பின்னரே அது பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது.

" சொற்கோவும் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திறரேல் நீறெங்கே மாமறை நூல்தானெங்கே
எந்தை பிரானைந்தெழுத்தெங்கே "

(நாவலர் பிரபந்தத் திரட்டு 73ம் பக்கம்)

என்று திருமுறைகளின் பெருமை பற்றி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் கூறியிருப்பதை சைவப் பெருமக்கள் தமது ஆழ்ந்த கவனத்திற்கு எடுத்துக் கொள்வார்களாக.

இத்துணைச் சிறப்புக்கும் மேன்மைக்குமுரிய திருமுறைகளில் தேவார முதலிகள் மூவரும் பாடிய எழுநூற்றுத் தொண்ணூற்ருறு திருப்பதிகங்களும் திருவாசகம், திருக்கோவையார் முதலாகப் பெரியபுராண மீருக பதினெண்ணுயிரத்து முன்னூற்றைம்பத்தெட்டுத் திருப்பாடல்கள் திருமுறைச் செல்வமாக நமக்குக் கிடைத்திருக்கின்றன. இத் திருமுறைகளைப் பண்ணுங்கமாகவும் சுத்தாங்கமாகவும் பாடிவருகிருர்கள். தருமபுரம் ஆதினம் தேவாரப்பண்களைப் பகற்பண் பதின்மூன்ருகவும், இராப்பண் ஒன்பதாகவும், பொதுப்பண் மூன்ருகவும் வகுத்து இருப்பத்தைந்து பண்களில் பாடுவதற்குத் திருமுறைகளைப் பதிப்பித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நூலாசிரியர் சுவாமி விபுலானந்த அடிகளார் பகற்பண் பத்து, இராப்பண் எட்டு, பொதுப்பண்கள் நான்கு என வகுத்து இருப்பத்திரண்டு பண்களை யாழ் நூலில் அறிமுகப்படுத்துகின்றார்.

பண்ணிசைதான் தொன்மைவாய்த்த இசை எனவும், கர்னாடக இசை பின்னர் தோன்றிய தென்பதும் ஆய்வாளர்களின் ஒத்தமுடிவாகும். இந்தப் பண்களை இருபத்தொரு இராகங்களில் பாடுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கின்றது. எந்தப் பண்ணை என்ன இராகத்தில் பாட வேண்டும் என்பதையும் ஒவ்வொரு தேவாரப் பண்ணுக்கும் அமைந்த கட்டளைவகையும், திருமுறைகளின் யாப்பமைதியும், தாள அமைப்பும் தக்கார் வாய்க் கேட்டறிந்து கொள்ள வேண்டியவை. தேவாரப் பண்கள் நூற்றியெட்டுக் கட்டளை பேதங்களையுடையன. திருப்புகழுக்குச் சந்தங்களைக் கணித்து தாளங்களை அமைப்பது போலத் திருமுறைகளுக்குக் கட்டளை பேதங்களைக் கணித்து தாளங்களை (லயம்) அமைக்க வேண்டும்.

தேவாரங்களும் திவ்யப்பிரபந்தங்களும் பண்டைக்காலத்தில் பண்ணோடு பாடப் பெற்று வந்தன-இக்காலத்தில் ஓதிவருகின்ற முறை கீழ்வேளூர் சொக்கலிங்கதேசிகர் கற்பித்து வந்த வழியைப் பின்பற்றியதாகும். திருமுறைகளையும் திவ்யப் பிரபந்தங்க ளையும் பாடுவோர் பொருளுணர்ந்து பதச்சிதைவில்லாது அட்கரசுத்தியோடு பாடுவார்களாக.

''பாடுவார் பசி தீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்''.....

''கீதத்தை மிகப் பாடும் அடியார்கள் குடியாக''...........

''பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக''
என்று ஞானசம்பந்தரும்

''பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி''...................

''பத்திமையால் பணிந்தடியேன் பன்னாள் பாமாலை பாடப் பயில்வித்தானை''......

''பண்ணுண்ட பாடலோடாடும் பரம'' என்று நாவுக்கரசரும்

''அர்ச்சனை பாட்டேயாகும் மண்மேல் சொற்றமிழ் பாடுக'' என்று இறைவன் கூற சுந்தரர் பித்தா என்று பாடியருளியதும்.

''நான் மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும் போது உன்னடிக்கீழ் இருக்க வேண்டும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று காரைக்காலம்மையாரும் துதித்ததை நினைவுபடுத்துவோமாக. இவர்கள் பாடிப் பாடிச் செய்த அற்புதங்களை அறிந்திருப்பீர்கள். சூலைநோய் நீங்கவும், இழந்த கண்களை மீண்டும் பெறவும், முதலையுண்ட பாலனை வரவழைக்கவும், விஷம் நீங்கவும், பூம்பாவை உயிர்பெற்றெழவும், கல் தெப்பமாக மிதக்கவும், கோள்களின் கொடுமை நீங்கவும் தேவாரங்கள் பாடி இறைவன் திருவருளால் நாயன்மார்கள் பல அற்புதங்களை நிகழ்த்தினார்கள்.

பின்வரும் தொடக்கத்தையுடைய தேவாரப் பதிகங்கள் ஐந்தையும் நாள்தோறும் ஓதிவருவதால் இகபரசுகத்தைப் பெறலாம். இறைவன் மீதும் தமிழ்வேதமாகிய திருமுறைகளின் மீதும் பூரண நம்பிக்கை உடையவர்களுக்கு இவை சகல சௌபாக்கியங்களையும் நல்குமென்று கூறுகின்றார்கள்.

"வேயறுதோளி பங்கன் ,, — கோளறு பதிகம் சம்பந்தர்.
"இடரினும் தளரினும் ,, — சம்பந்தர்.
"அவ்வினைக் கிவ்வினை — சம்பந்தர்.
"மறையுடையாய் தோலுடையாய் — சம்பந்தர்.
"ஓருருவாயினை" திருவெழுகூற்றிருக்கை — சம்பந்தர்.

என்பன இப் பதிகங்கள்.

ஆலயங்களில் பாடப்படும் பஞ்ச புராணத்தில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்னும் ஐந்துந்தான் அடங்கும். திருப்புகழையும் சேர்த்துப் பாடுவது பிற்கால வழக்கமாகும் பக்திச்சுவை சொட்டும் பாடல்களெல்லாம் இறைவனோடு நம்மைப் பிணைத்துக்கொள்ள உதவும் அருட்கருவியாகும்.

"பாட வேண்டும் நான் போற்றி நின்னையே பாடிப் பாடி நைந்து நைந்து நெக்குருகி ஆட வேண்டும் நான் "என்று மாணிக்கவாசகர் இறைவனை வேண்டுகின்றார்.

சற்புத்திரமார்க்கத்தில் நின்று வாத்சல்ய பாவனையோடு திருஞானசம்பந்தர் திருமுறைகளைப் பாடியருளினார். தாசமார்க்கத்தில் நின்று ஆண்டான் அடிமை என்ற நிலையில் நாவுக்கரசர் இறைவனைப் பாடியுள்ளார். சகமார்க்கமென்னும் தோழமை நெறி நின்று சுந்தரர் பாடியுள்ளார். சன்மார்க்க நெறிநின்று பூரண சரணாகதியோடு மாணிக்கவாசகர் திருவாசகத்தை அருளிச் செய்தார். ஏனைய அருளாளர்களும் அவ்வாறே பாடியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் திருமுறைச் செல்வங்களை அவரவர் மன பரிபக்குவத்திற் கேற்ப பாடியும் பாராயணம் செய்தும் பக்தி மார்க்கத்தில் தம்மை நெறிப்படுத்தி ஆத்ம ஞானத்தைப்பெற்று இறைவனோடு ஐக்கியப்படுவதாகிய யோகானுபவத்தை அடையலாமல்லவா? எனவே பண்ணோடு பாடக் கூடியவர்கள் இறைவனைப் பாடிப் பாடிச் சுகம் பெறுவார்களாக. பாடவராதே என்று நினைக்கின்றவர்கள் பொருளுணர்ந்து திருமுறைகளைப் பாராயணஞ் செய்து நலம் பெறுவார்களாக,

“ சைவத்தின் மேல் சமயம் வேறில்லை அதில் சார் சிவமாம்
தெய்வத்தின் மேல் தெய்வமில்லென்றும் செய்பொருள்
வாய்மை வைத்த சீர்திருந் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச் செய்த நால்வர் பொற்றுள் எம்முயித் துணையே ”

ஓம் சிவ சிவ.


15, வித்தியாலயம் ஒழுங்கை,
திருக்கோணமலை,
09 - 07 - 87

சைவப்புலவர் - பண்டிதர்
இ. வடிவேலு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுரை



தொண்டனேன் விளம்புமா விளம்பத் துணைநிற்கும் ஸ்ரீ மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானருளால் இந்தச் சிறு நூல் பிறக்கின்றது. ஆலயங்களில் செய்யப்பட்டுவரும் சரியைத் தொண்டுகள்போல இந்த நூலினை எழுதுவதையும் ஒரு தொண்டாகக் கருதி எழுதலானேன். அறியாமையினுற் பிழைகள் நேரும்போது பிஞ்ஞகனும் பிழை பொறுப்பான். பெருமக்களும் பிழைபொறுப்பார்களாக.

ஹிந்துக்கள் மாத்திரமன்றி வேறு மதத்தவர்களும் விளங்கிக் கொள்வதற்காக, மூர்த்தி விளக்கங்களைச் சிறு குறிப்புகளாகத் தொகுத்து நுனிப்புல் மேய்ந்ததுபோலக் கொடுத்துள்ளேன். ஆழ்ந்து செல்லாததற்கு அறிஞர்கள் மன்னிப்பார்களாக. ஹிந்துமத தத்துவங்களும் புராண இதிகாச தத்துவங்களும் பூரணப்படாத மனிதர்கள் மத்தியிலே சர்ச்சைக்குரியதாகவே இருந்து வருகின்றது. ஆதலால் அடிப்படை அறிவோடு ஆத்மத் திருப்தியடைந்த நிலையில் சுருக்கக் குறிப்புகளாலேயே இச் சிறு நூலை நிறைவு செய்யத் திருவருள் கூட்டியுள்ளது.

திருக்கோணேஸ்வரம் பாடல்பெற்ற தலமாதலாலும், திருமுறைக் கோவிலொன்று அங்கு இருப்பதாலும் திருமுறைகளின் சிறப்பைக் கூறும் " திருமுறைச்செல்வம் " என்ற கட்டுரையொன்றும் அனுபந்தமாக இந்நூலிற் சேர்க்கப்பட்டுள்ளது.

திருக்கோணமலை " ஹிந்து தர்ம வெளியீட்டு தாபனம் " இந்நூலை வெளியிடுகிறது. தன்னைக் காட்டாமல் ஸ்தாபனத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைவத்து ஹிந்துதர்மப் பணியாற்றும் அன்பு உள்ளத்தின் தர்மமாக இந்நூல் மலர்கின்றது. அதற்கு என்றும் நன்றிக்கடப்பாடுடையேன். இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய சிவாச்சாரியப் பெருமக்களுக்கும், இதனை அழகாக உருவாக்கிய நியூ லீலா அச்சகத்தார் அனைவருக்கும் பணிவுடன் நன்றி கூறுகிறேன் இந்நூல் பூரணமான நூலன்று. பூரணத்துக்கு வழிகாட்டும் சிறுநூல். இதனைக் கோணேசப்பெருமானுடைய திருவடிகளில் சமர்ப்பணம் செய்யவும் ஆத்ம நிறைவுபெறவும் எம்பெருமான் அருள்பாலிப்பாராக.

சைவப்புலவர் • பண்டிதர்

இ. வடிவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Printed by*
NEW LEELA PRESS
"Sinnadurai Building"
182, Messenger Street,
Colombo-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org